செப்டம்பர் 2026

முதல் பதிப்பு

(Issue 1 of 2)

மாதம் இருமுறை
வெளியாகும்
சட்டத் தீர்ப்பு தொகுப்பு

சட்டம்
எளிமையாக
புரியட்டும்!

# LIS MEME

(A Tamil Legal Digest)

உயர்நீதிமன்றம் & உச்சநீதிமன்றத்தின்

## 15 முக்கிய தீர்ப்புகள்

எளிய தமிழில்
சட்ட விளக்கம்

சட்டக் கருத்துகளை
நினைவில் நிறுத்தும்
MEME-கள்

இலவச
டிஜிட்டல்
வெளியீடு

உயர்நீதிமன்றம் & உச்சநீதிமன்றத்தின்
தேர்ந்தெடுக்கப்பட்ட தீர்ப்புகள்

“ சட்டம் எளிமையாக புரியட்டும்;
MEME மூலம் மனதில் நிலைத்திருக்கட்டும்! ”

# LIS MEME

### சட்டம் எளிமையானது!

*மாதம் இருமுறை வரும் தீர்ப்பு தொகுப்பு — முன்னுரை*

**அன்பான வாசகர்களுக்கு,**

சட்டம் என்பது வெறும் புத்தகங்களில் அடைபட்டுக் கிடக்கும் வார்த்தைகள் அல்ல — அது நம் அன்றாட வாழ்க்கையின் ஒவ்வொரு கணத்திலும் உயிர்ப்புடன் இயங்கும் ஒரு கருவி. ஆனால் அந்தக் கருவியை பயன்படுத்தத் தெரியாத வரை, அது இருந்தும் இல்லாமல் போகும். இந்த உண்மையை மனதில் கொண்டே, "LIS MEME" என்ற இந்த தொகுப்பு உருவானது — சட்டத்தை எளிமையாக, சுவாரஸ்யமாக, அனைவரிடமும் கொண்டு செல்லும் ஒரு புதிய முயற்சியாக.

---

## LIS MEME — என்ன, எப்படி, எங்கே?

"LIS MEME" தொகுப்பு மாதம் இருமுறை வெளியிடப்படுகிறது — ஒவ்வொரு மாதமும் **முதல் பதிப்பு (1st Edition)** மற்றும் **இரண்டாம் பதிப்பு (2nd Edition)** என இரண்டு தொகுப்புகளாக. ஆண்டு முழுவதும் 24 பதிப்புகளாக இந்த சட்ட விழிப்புணர்வு பயணம் நீடிக்கும்.

ஒவ்வொரு பதிப்பிலும் சரியாக 15 தீர்ப்புகள் இடம் பெறும். சென்னை உயர்நீதிமன்றம் மற்றும் இந்திய உச்சநீதிமன்றம் வழங்கிய புதிய, முக்கியமான தீர்ப்புகளை தேர்ந்தெடுத்து, நடைமுறையில் உதவும் வகையில் தொகுக்கப்படும்.

மிக முக்கியமான சிறப்பம்சம் — ஒவ்வொரு தீர்ப்பும் **தமிழில் எளிய விளக்கமாகவும்**, அதனுடன் **சட்டக் கருத்தை நகைச்சுவையாக விளக்கும்**

**MEME-ஆகவும்** வழங்கப்படும். சட்டம் கடினமாக இருக்க வேண்டியதில்லை — அது சிரிக்கவும் வைக்கலாம், சிந்திக்கவும் வைக்கலாம்! **LIS MEME**

இந்த தொகுப்பு **ஆன்லைனில் மட்டுமே வெளியிடப்படும்** —இணைய முகவரியிலும், Facebook, WhatsApp மற்றும் டிஜிட்டல் தளங்கள் வழியாக அனைவரும் இலவசமாக பெறலாம். எங்கிருந்தும், எந்நேரமும் படிக்கலாம்.

---

**நன்றி…**

இந்த தொகுப்பை படிக்கும் ஒவ்வொரு வாசகருக்கும் நன்றி. Budding Lawyers பக்கத்தை தினமும் பின்தொடரும் அனைவருக்கும், சட்ட விழிப்புணர்வில் என்னுடன் கை கோர்க்கும் தோழர்களுக்கும் — உங்கள் ஆர்வமே என் ஊக்கம். மாதம் இருமுறையும் LIS MEME-ஐ எதிர்நோக்கி காத்திருக்கும் வாசகர்கள்தான் இந்த பணியை தொடர வைக்கும் சக்தி.
"சட்டம் தெரிந்தால் வாழ்க்கை எளிதாகும்; MEME பார்த்தால் சட்டம் மறக்காது!" — இந்த நம்பிக்கையே *LIS MEME*-ன் ஆதார வேர். இந்த பயணம் தொடரும்; ஒவ்வொரு பதிப்பும் புதிய வெளிச்சம் தரும்.

Adv. V. Satheeskumar, B.E., B.L.,
*Budding Lawyers | LIS MEME*

# LIS MEME

(A Tamil Legal Digest)

## செப்டெம்பர் 2026 — தீர்ப்பு தொகுப்பு அட்டவணை

### உயர்நீதிமன்றம் & உச்சநீதிமன்றம் — தேர்ந்தெடுத்த 15 தீர்ப்புகள்

| வ.எண் | சட்டக்கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| 1 | வழக்கில் ஆரம்பத்தில் எந்த பரிகாரமும் கோரப்படாத இரண்டாம் பிரதிவாதி ex parte ஆன பிறகு, அவருக்கு அறிவிப்பு வழங்காமல் திருத்த மனு மூலம் அவருக்கு எதிராக பரிகாரம் கோர இயலுமா? | சென்னை உயர்நீதிமன்றம் | CRP.Nos.2882 & 2883 of 2017 | 1 |
| 2 | வரதட்சணை கொடுமை வழக்கில் மனைவியும் அவரது குடும்பத்தினரும் வரதட்சணை கொடுத்ததாக வாக்குமூலம் அளித்தால், அந்த வாக்குமூலத்தை மட்டும் ஆதாரமாக கொண்டு அவர்களுக்கு எதிராக வரதட்சணை | உச்சநீதிமன்றம் | SLP (Crl.) No.13755 of 2025 | 4 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | கொடுத்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்ய முடியுமா? | | | |
| 3 | உறவினர்களுக்கிடையே எல்லைத் தகராறில் நடந்த சண்டையில் மரணம் ஏற்பட்டால் அது மரணம் விளைவிக்கும் குற்றமா (சட்டப்பிரிவு 304 Part II IPC) அல்லது கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றமா (சட்டப்பிரிவு 325)? "Bastard" என்று திட்டினால் அது சட்டப்பிரிவு 294(b) IPC கீழ் தண்டிக்கத்தக்க ஆபாசமான வார்த்தையாகுமா? | உச்சநீதிமன்றம் | Criminal Appeal Nos. 1807 of 2019 & 677 of 2020 | 7 |
| 4 | மணமான ஒரு வருடத்திற்குள் மனைவி தற்கொலை செய்துகொண்டால், | சென்னை உயர்நீதிமன்றம் | Crl.A.No.284 of 2022 | 11 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | வரதட்சணை கோரிய துன்புறுத்தல் நடந்தது என்று தானாகவே முன்அனுமானம் எழுமா? அதற்கு முன்பு அடிப்படை உண்மைகளை நிரூபிக்க வேண்டுமா? | | | |
| 5 | வாடகைதாரர் தானே வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்த பிறகும் வீட்டை காலி செய்யாவிட்டால், வாடகைக்கு விடுபவர் இரட்டிப்பு வாடகை இழப்பீடு கோரலாமா? மேலும், சிறப்பு சட்டத்தின் கீழ் ஒருமுறை தீர்வு பெற்ற பிறகு, அதே விஷயத்தில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாமா? | சென்னை உயர்நீதிமன்றம் | C.R.P.Nos. 4284, 2850 & 3787 of 2023 | 15 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| 6 | மருத்துவமனை மற்றும் மருத்துவர் இடையே செய்யப்பட்ட தொழில்முறை ஒப்பந்தத்தில் Non-Compete மற்றும் Non-Solicitation விதிகள் சட்டபூர்வமாக செல்லுபடியாகுமா? அத்தகைய ஒப்பந்தத்தில் உள்ள நடுவர் நியமனம் (Arbitration) கோர முடியுமா? | சென்னை உயர்நீதிமன்றம் | Arb.O.P.(Com.Div.) No.708 of 2025 | 19 |
| 7 | வருங்கால வைப்பு நிதி (Provident Fund) பங்களிப்பு பறிமுதல் தொடர்பான பிரச்சினையில் சிவில் நீதிமன்றத்திற்கு நிவாரணம் வழங்கும் அதிகார வரம்பு உள்ளதா? அதே சமயம், 2001 அரசு அறிவிப்பு விமான நிறுவனங்களுக்கு | சென்னை உயர்நீதிமன்றம் | S.A.No.582 of 2009 | 23 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | பழைய காலத்திற்கு பின்னோக்கி பயன்படுமா? | | | |
| 8 | நீதிமன்றம் ஆவணங்களை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டும், கையில் வைத்திருந்தும் தாக்கல் செய்யாத பிரதிவாதிக்கு எதிராக பாதகமான முன்அனுமானம் கொள்ளலாமா? மேலும், கூட்டாண்மை நிறுவனத்தில் உண்மையான பங்குதாரரின் ஒப்புதல் இல்லாமல் புதிய கூட்டாண்மை பத்திரம் செல்லுமா? | மதுரை, சென்னை உயர்நீதிமன்றம் | S.A.(MD)No.220 of 2007 | 26 |
| 9 | காலவரையத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்ததை நிரூபிக்காமல் தாக்கல் செய்யப்பட்ட | சென்னை உயர்நீதிமன்றம் | A.S.Nos.479 of 2023 & 421 of 2024 | 30 |

| வ.எண் | சட்டக்கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்படுமா? மேலும், பாகவழக்கில் நிலுவையான சொத்தை ஒரு தரப்பு மற்றொரு தரப்புக்கு விற்க உரிமை இல்லாதபோது செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றம் நிறைவேற்றும்படி உத்தரவிட முடியுமா? | | | |
| 10 | உயில் மீதுள்ள சர்ச்சையான கையொப்பத்தை நிரூபிக்க, நீதிமன்றம் ஒப்புக்கொள்ளப்படாத கையொப்பங்களை Forensic Science Department-க்கு ஒப்பிடுவதற்கு அனுப்பலாமா? இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு 73-ன் கீழ் Forensic ஒப்பீட்டிற்கு | சென்னை உயர்நீதிமன்றம் | O.S.A.Nos.48 & 50 of 2025 | 34 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | பயன்படுத்தப்படும் கையொப்பங்கள் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டதாகவோ நிரூபிக்கப்பட்டதாகவோ இருக்க வேண்டுமா? | | | |
| 11 | வாடகைதாரர், வீட்டு உரிமையாளரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருவது தானாகக் கிடைக்கும் உரிமையா? வாக்குமூலத்தில் முன்வைக்கப்படாத புதிய வாதத்தை நிரூபிக்க குறுக்கு விசாரணை அனுமதிக்கப்படுமா? | சென்னை உயர்நீதிமன்றம் | CRP.No.1785 of 2025 and C.M.P.No.10306 of 2025 | 37 |
| 12 | ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களில், விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவருக்கு | உச்சநீதிமன்றம் | MA No. 2034 of 2022 in MA No. 1849 of 2021 in SLP (Crl.) No. 5191 of 2021 (with connected matter) | 41 |

| வ.எண் | சட்டக்கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| | ஆஜராகுமாறு அறிவிப்பு வழங்குவது கட்டாயமா? அந்த அறிவிப்பை ஏற்று ஒத்துழைப்பவரை நேரடியாகக் கைது செய்ய முடியுமா? | | | |
| 13 | ஏழு வயது குழந்தை ஒரே நேரடி சாட்சியாக இருக்கும் நிலையில், சாட்சி பயிற்றுவிக்கப்பட்டது (tutored) என்று கூறி அவரது வாக்குமூலத்தை நிராகரிக்க முடியுமா? வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நிகழும் மரணத்தில், நடந்தது என்ன என்பதை விளக்காமல் மௌனம் காக்கும் கணவன் மீது சாட்சியச் சட்டப்பிரிவு 106-ன்படி நிரூபிக்கும் சுமையை மாற்ற முடியுமா? | உச்சநீதிமன்றம் | Criminal Appeal No. 1669 of 2012 | 46 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| 14 | ஒரு வழக்கில் தரப்பினராக இல்லாத ஒருவர், அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலை தீர்ப்பாணை மோசடியாகவும் கூட்டுசதியாகவும், அதிகார எல்லை இல்லாத நீதிமன்றத்தில் பெறப்பட்டது எனக் கூறி புதிய விளம்புகை வழக்கு தாக்கல் செய்யும்போது, அவ்வழக்கை முன்தீர்ப்புத் தடை (res judicata) அடிப்படையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11 மூலம் தொடக்கத்திலேயே தள்ளுபடி செய்ய முடியுமா? | உச்சநீதிமன்றம் | Civil Appeal No. 7743 of 2025 (arising out of SLP (C) No. 18230 of 2025) | 50 |

| வ.எண் | சட்டக் கேள்வி (தலைப்பு) | நீதிமன்றம் | வழக்கு எண் | பக்கம் |
|---|---|---|---|---|
| 15 | பதிவு செய்யப்பட்ட உயிலில் உள்ள கையொப்பங்களை எதிர்த்தரப்பே ஒப்புக்கொண்ட நிலையில், அந்த உயிலை மறுத்து "கூட்டு குடும்பச் சொத்து" எனக் கோர முடியுமா? பதிவு செய்யப்பட்ட உயிலை மறுக்கும் சுமை யார் மீது? | உச்சநீதிமன்றம் | Civil Appeal Nos. 5921 & 5922 of 2015 | 55 |

## #1#

**வழக்கில் ஆரம்பத்தில் எந்த பரிகாரமும் கோரப்படாத இரண்டாம் பிரதிவாதி ex parte ஆன பிறகு, அவருக்கு அறிவிப்பு வழங்காமல் திருத்த மனு மூலம் அவருக்கு எதிராக பரிகாரம் கோர இயலுமா?**




இவ்வழக்கில், Canara Bank (வாதி) திருப்பூரில் உள்ள ஒரு நிறுவனத்திட-மிருந்து ரூ.19,60,292 வசூல் செய்ய மூன்று பிரதிவாதிகளை — (1) Kotak Mahindra Bank, (2) V.Sadagopan (மறுஆய்வு மனுதாரர்), (3) M.M.Clothing Inc. — சேர்த்து O.S.No.40 of 2012 என்ற வழக்கு தாக்கல் செய்தது. ஆரம்ப வழக்கில் கோரப்பட்ட பரிகாரம் முதல் பிரதி-வாதியான Kotak Mahindra Bank-க்கு மட்டுமே எதிராக இருந்தது; இரண்-டாம் பிரதிவாதியான Sadagopan-க்கு எதிராக எந்த பரிகாரமும் கோரப்பட-வில்லை.

Sadagopan சம்மன் வழங்கப்பட்ட-தற்கு பின்னர், தமக்கு எதிராக பரிகாரம் கோரப்படவில்லை என்று கண்டு வழக்கை எதிர்க்காமல் விட்டார். இதன் காரணமாக 19.03.2013 அன்று அவர் ex parte ஆக அமைக்கப்பட்டார்.

வழக்கு முதல் பிரதிவாதி மட்டும் தொடர்ந்து எதிர்த்து நடந்தது.

வழக்கு நிலுவையில் இருந்தபோது, வாதியான Canara Bank, வழக்கு மனுவை திருத்தி முதல் மற்றும் இரண்டாம் பிரதிவாதிகள் இருவரும் கூட்டாக மற்றும் தனித்தனியாக (jointly and severally) பொறுப்பாவர் என்று பரிகாரம் சேர்க்க மனு தாக்கல் செய்தது. இந்த திருத்த மனு Sadagopan-க்கு அறிவிப்பு வழங்காம-லேயே அனுமதிக்கப்பட்டது. பின்னர் முதல் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு விசாரணையில் தள்ளுபடி செய்யப்-பட்டு, இரண்டாம் பிரதிவாதியான Sadagopan-க்கு மட்டும் எதிராக ex parte தீர்ப்பு வழங்கப்பட்டது.

Sadagopan உரிமையியல் நடை-முறைச் சட்டம் கட்டளை IX விதி 13 கீழ் ex parte தீர்ப்பை ரத்து செய்ய மனு தாக்கல் செய்தார். ஆனால் விசார-ணை நீதிமன்றம், வழக்கு தகுதி அடிப்படையில் முடிந்துவிட்டது என்-று கூறி அந்த மனுவை ஏற்க மறுத்தது. இதனை எதிர்த்தே இந்த மறுஆய்வு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.

மனுதாரர் தரப்பில், ஆரம்பத்தில் தமக்கு எதிராக எந்த பரிகாரமும் கோரப்படாததால் வழக்கை எதிர்க்க-வில்லை என்றும், திருத்த மனு மூலம் முதன்முதலாக தமக்கு எதிராக பரிகா-ரம் சேர்க்கப்பட்டபோது குறைந்தது அந்நேரத்திலாவது அறிவிப்பு வழங்க வேண்டும் என்றும், Civil Rules of Prac-tice விதி 31 இடைக்கால மனுக்களுக்கு அறிவிப்பு கட்டாயம் என்று விதிக்கிறது என்றும் வாதிட்ட-னர். மேலும் திருத்த மனு தாக்கல் செய்த நாளில் காலவரையீட்டுச் சட்டம் சரத்துகள் 23, 26, 103 படி கோரிக்கை காலாவதியாகியிருந்தது என்றும் சுட்டிக்காட்டினர்.

வாதி தரப்பில், Sadagopan சம்மன் பெற்றும் வழக்கை விருப்பமாகவே எதிர்க்கவில்லை என்றும், வழக்கு மனுவில் இரண்டாம் பிரதிவாதிக்கு எதிரான குற்றச்சாட்டுகள் (paragraph 20) வெளிப்படையாக இருந்தன என்றும், ஆகவே ex parte தீர்ப்பை ரத்து செய்ய அவர் தகுதியற்றவர் என்றும் வாதிட்டனர்.

நீதிமன்றம் ஆய்வு செய்தபோது, Civil Rules of Practice விதி 31 படி எல்லா

இடைக்கால மனுக்களுக்கும் வழக்கில் உள்ள அனைத்து தரப்பினருக்கும் அறிவிப்பு வழங்க வேண்டும் என்று தெளிவுபடுத்தியது. திருத்த மனு மூலம் முதன்முதலாக Sadagopan-க்கு எதிராக பரிகாரம் சேர்க்கப்பட்டபோது, அவர் ex parte ஆக இருந்தாலும் அந்த திருத்த மனு அவருக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும் என்று கூறியது. மேலும் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை IX விதி 13-ன் நிபந்தனையின்படி ex parte தீர்ப்பை ரத்து செய்யும் அதிகாரம் நீதிமன்றத்திற்கு உண்டு என்றும், முதல் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடியாகி இருப்பதால் இரண்டாம் பிரதிவாதிக்கு மட்டும் எதிரான ex parte தீர்ப்பை தனியாக ரத்து செய்வதில் தடையில்லை என்றும் கூறியது.

இதனடிப்படையில், மறுஆய்வு மனுக்கள் அனுமதிக்கப்பட்டன. Sadagopan -க்கு எதிரான ex parte தீர்ப்பு ரத்து செய்யப்பட்டது. திருத்த மனுவை அனுமதித்த உத்தரவும் ரத்து செய்யப்பட்டு, Sadagopan-க்கு விரிவான பதில் மனு தாக்கல் செய்ய வாய்ப்பளித்து 60 நாட்களுக்குள் திருத்த மனுவை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம்,

**"திருத்த மனு மூலம் முதன்முதலாக ஒரு பிரதிவாதிக்கு எதிராக பரிகாரம் சேர்க்கப்படும்போது, அவர் ex parte ஆக இருந்தாலும் அந்த திருத்த மனுவில் அவருக்கு அறிவிப்பு வழங்குவது கட்டாயம்; அறிவிப்பின்றி நிறைவேற்றப்பட்ட திருத்தம் மற்றும் அதன் அடிப்படையில் பெறப்பட்ட ex parte தீர்ப்பு சட்டத்திற்கு புறம்பானது"** என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

**IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS**

**CRP.Nos.2882 & 2883 of 2017**

**V.Sadagopan v. M/s.Canara Bank & Others**

**Coram: Justice P.B.Balaji**

**Date: 17.06.2025**

**Citation: 2025(5) CTC 554**

----------------------------------------------

## #2#

**வரதட்சணை கொடுமை வழக்கில் மனைவியும் அவரது குடும்பத்தினரும் வரதட்சணை கொடுத்ததாக வாக்குமூலம் அளித்தால், அந்த வாக்குமூலத்தை மட்டும் ஆதாரமாக கொண்டு அவர்களுக்கு எதிராக வரதட்சணை கொடுத்த குற்றத்திற்காக வழக்கு பதிவு செய்ய முடியுமா?**




இவ்வழக்கில், மனுதாரர் Rahul Gupta மற்றும் அவரது மனைவி Radhika Gupta இடையே 24.11.2007 அன்று திருமணம் நடைபெற்றது. மனைவி 25.12.2021 அன்று கணவர் வீட்டை விட்டு சென்றார். மனைவியின் புகாரின் பேரில் 07.01.2023 அன்று கணவர் மற்றும் அவரது குடும்பத்தினருக்கு எதிராக இந்திய தண்டனைச் சட்டம் சட்டப்பிரிவு 498A மற்றும் வரதட்சணை தடை சட்டம் சட்டப்பிரிவு 3 கீழ் FIR பதிவு செய்யப்பட்டது. விசாரணையில் மனைவியும் அவரது குடும்பத்தினரும் திருமணத்திற்கு முன்பே வரதட்சணை பேசப்பட்டதாகவும், அது செலுத்தப்பட்டதாகவும் வாக்குமூலம் அளித்தனர்.

இதனை அடிப்படையாக கொண்டு கணவரான Rahul Gupta, 25.12.2023 அன்று தனது மனைவி மற்றும் அவரது குடும்பத்தினர் வரதட்சணை கொடுத்-ததை ஒப்புக்கொண்டுள்ளனர் என்று கூறி, அவர்களுக்கு எதிராக வரதட்ச-ணை தடை சட்டம் சட்டப்பிரிவு 3 கீழ் தனி FIR பதிவு செய்யும்படி புகார் அளித்தார். ஆனால் அந்தப் புகார் FIR ஆக பதிவு செய்யப்படவில்லை. அதனால் சட்டப்பிரிவு 156(3) கீழ் நீதிமன்றத்தை அணுகினார். நீதிமன்-றம் அந்த மனுவை நிராகரித்தது. மறுஆய்வு மற்றும் உயர்நீதிமன்றத்-திலும் தோல்வியடைந்த பின்னர் உச்ச-நீதிமன்றம் வரை வழக்கு சென்றது.

மனுதாரர் தரப்பில், வரதட்சணை தடை சட்டம் சட்டப்பிரிவு 3 கொடுப்-பவர் மற்றும் வாங்குபவர் இருவரையும் தண்டிக்கிறது என்றும், மனைவியும் குடும்பத்தினரும் வரதட்சணை கொடுத்தாகவே கூறியுள்ளனர் என்-றும், டெல்லி உயர்நீதிமன்றம் Neera Singh வழக்கில் வரதட்சணை கொடுத்-தவர்களுக்கு எதிராவும் வழக்கு பதிவு செய்யப்பட வேண்டும் என்று கூறியது என்றும் வாதிட்டார்.

நீதிமன்றம் ஆய்வு செய்தபோது, 1982 Joint Parliamentary Committee அறிக்-கையில் கூறப்பட்டுள்ளதை மேற்-கோள் காட்டியது. வரதட்சணை கொடுப்பவர்கள் பொதுவாக சமூக நெருக்கடியால் கட்டாயப்படுத்தப்படு-கின்றனர் என்றும், அவர்களை வாங்கு-பவர்களுடன் சமநிலையில் வைத்து தண்டிக்கக்கூடாது என்றும், அவ்வாறு செய்தால் யாரும் புகார் அளிக்க முன்வர மாட்டார்கள் என்றும் அந்த அறிக்கை தெளிவுபடுத்தியது என்றது. அதன் அடிப்படையில் 1986-ல் வரதட்-சணை தடை சட்டம் சட்டப்பிரிவு 7(3) சேர்க்கப்பட்டது என்று கூறியது.

வரதட்சணை தடை சட்டம் சட்டப்பிரிவு 7(3) தெளிவாக கூறு-கிறது: "பாதிக்கப்பட்ட நபர் அளிக்கும் வாக்குமூலம் அவருக்கு எதிராக இந்தச் சட்டத்தின் கீழ் வழக்கு தொடர அடிப்படையாக இருக்கக்கூடாது." மனைவியும் அவரது குடும்பத்தினரும் இந்த வழக்கில் "பாதிக்கப்பட்ட நபர்கள்" (persons aggrieved) ஆவர். எனவே அவர்கள் அளித்த வாக்கு-மூலத்தை மட்டுமே ஆதாரமாக கொண்டு அவர்களுக்கு எதிராக வழக்-

கு பதிவு செய்ய முடியாது என்று நீதிமன்றம் கூறியது.

மனுதாரர் நம்பிக்கை வைத்த Neera Singh தீர்ப்பு சட்டப்பிரிவு 7(3) கவனிக்காமல் வழங்கப்பட்டது என்றும், அதற்கு எந்த முன்னுதாரண மதிப்பும் இல்லை என்றும் தெளிவுபடுத்தியது. இருப்பினும், சட்டப்பிரிவு 7(3)பாதுகாப்பு இல்லாத சூழலில் தனி சாட்சியங்கள் இருந்தால் இரண்டாம் FIR பதிவு செய்யலாம் என்ற கோட்பாட்டையும் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

இதனடிப்படையில், சிறப்பு அனுமதி மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம்,

**"வரதட்சணை வழக்கில் பாதிக்கப்பட்டவர்களான மனைவி மற்றும் அவரது குடும்பத்தினர் அளிக்கும் வாக்குமூலத்தை மட்டுமே ஆதாரமாக கொண்டு அவர்களுக்கு எதிராக வரதட்சணை கொடுத்த குற்றத்திற்காக வழக்கு தொடர முடியாது; வரதட்சணை தடை சட்டம் சட்டப்பிரிவு 7(3) அவர்களுக்கு முழு பாதுகாப்பு அளிக்கிறது"**

என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

SLP (Crl.) No.13755 of 2025

Rahul Gupta v. Station House Officer & Others

Coram: Justice Sanjay Kumar & Justice K.Vinod Chandran

Date: 16.04.2026

Citation: 2026 INSC 374

---

#3#

**உறவினர்களுக்கிடையே எல்லைத் தகராறில் நடந்த சண்டையில் மரணம் ஏற்பட்டால் அது மரணம் விளைவிக்கும் குற்றமா (சட்டப்பிரிவு 304 Part II IPC) அல்லது கொடுங்காயம் ஏற்படுத்திய குற்றமா (சட்டப்பிரிவு 325)? "Bastard" என்று திட்டினால் அது சட்டப்பிரிவு 294(b) IPC கீழ் தண்டிக்கத்தக்க ஆபாசமான வார்த்தையாகுமா?**




இவ்வழக்கில், திருவிடைமருதூர் காவல் நிலையம் குற்றவழக்கு எண் 189/2014-ல் பதிவான வழக்கு ஆகும். A-1 செந்தில் மற்றும் A-2 சிவகுமார் ஆகியோர், தங்கள் உறவினரும் அண்டை வீட்டாரும் ஆகிய கலியாமூர்த்தியுடன் (இறந்தவர்) எல்லை தொடர்பான தகராறு கொண்டிருந்தனர்.

20.09.2014 அன்று காலை 11:30 மணிக்கு, இறந்தவர் தனது நிலத்தில் வேலி அமைத்துக் கொண்டிருந்தபோது குற்றவாளிகள் அதை எதிர்த்தனர். இறந்தவர் தொடர்ந்து வேலி அமைக்க முயன்றதால் சண்டை வெடித்தது.

A-1 செந்தில் அரிவாளை எடுத்து இறந்தவரை தாக்க முயன்றபோது, இறந்தவரின் சகோதரர் கலைவானன் (PW-4) இடையில் புகுந்தார். அதனால் அடி PW-4-ன் தோளிலும் கால் விரலிலும் பட்டது. இதற்கிடையில் A-2 சிவகுமார் அங்கு கிடந்த ஒரு கட்டையை எடுத்து இறந்தவரின் தலையில் பலமாக அடித்தார். இறந்தவர் மயக்கமடைந்து விழுந்தார். பின்னர் A-3 மற்றும் A-4 தடிகளால் இறந்தவரையும் PW-4-ஐயும் தாக்கினர். மருத்துவமனையில் சிகிச்சை பெற்றும் இறந்தவர் உயிரிழந்தார். மரணப் பரிசோதனையில் மண்டை ஓட்டு எலும்பு உடைந்து மூளையில் இரத்தக் கட்டிகள் இருந்தது கண்டறியப்பட்டது.

விசாரணை நீதிமன்றம் A-3 மற்றும் A-4-ஐ விடுதலை செய்தது. A-1-ஐ சட்டப்பிரிவு 324 IPC கீழும், A-2-ஐ சட்டப்பிரிவு 325 IPC கீழும் தண்டித்தது. இதை எதிர்த்து இறந்தவரின் மனைவி சந்திரா (PW-1) மேல்முறையீடு செய்தார். மதுரை உயர்நீதிமன்றம் A-1 மற்றும் A-2-ஐ சட்டப்பிரிவு 294(b) IPC கீழ் கூடுதலாக தண்டித்தது. மேலும் A-1-ஐ சட்டப்பிரிவு 304 Part II சட்டப்பிரிவு 34-உடன் சேர்த்தும், A-2-ஐ சட்டப்பிரிவு 304 Part II IPC கீழும் தலா ஐந்து ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்தது. இதை எதிர்த்தே உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

A-1 தரப்பில், "Bastard" என்ற வார்த்தை மட்டும் சட்டப்பிரிவு 294(b) IPC கீழ் ஆபாசமாகாது என்றும், A-1 PW-4-ஐ மட்டுமே அடித்தார், இறந்தவரை அடிக்கவில்லை என்றும், எனவே பொதுநோக்கம் இல்லை என்றும் வாதிடப்பட்டது. A-2 தரப்பில், அடி தலையை நோக்கி வேண்டுமென்றே போடவில்லை, தற்செயலாக விழுந்தது என்றும், மரணம் விளைவிக்கும் நோக்கமோ அறிவோ இல்லை என்றும், விசாரணை நீதிமன்றம் விதித்த சட்டப்பிரிவு 325 IPC தண்டனையே சரியானது என்றும் வாதிடப்பட்டது. அரசு தரப்பில், "Bastard" என்ற திட்டு ஆபாசமானது என்றும், A-2-ஐ தண்டித்தது சரி என்றும், A-1 முதலில் தாக்க முயன்றதால் பொதுநோக்கம் நிரூபிக்கப்படுகிறது என்றும் வாதிடப்பட்டது.

உச்சநீதிமன்றம் மூன்று முக்கியமான கேள்விகளை ஆய்வு செய்தது. முதலாவதாக, சட்டப்பிரிவு 294(b) IPC தொடர்பாக, Apoorva Arora v. State (Govt. of NCT of Delhi) (2024) 6 SCC 181 தீர்ப்பை மேற்கோள் காட்டி, ஆபாசம் என்பது காம உணர்வை தூண்டுவதாக இருக்க வேண்டும் என்று வலியுறுத்தியது. இன்றைய காலகட்டத்தில் சூடான வாக்குவாதங்களில் பயன்படுத்தப்படும் "Bastard" என்ற வார்த்தை மட்டும் ஆபாச வார்த்தையாகாது என்று தெளிவுபடுத்தியது. எனவே A-1 மற்றும் A-2-க்கு விதிக்கப்பட்ட சட்டப்பிரிவு 294(b) IPC தண்டனை ரத்து செய்யப்பட்டது.

இரண்டாவதாக, A-1-க்கு சட்டப்பிரிவு 34 IPC பொதுநோக்கம் பொருந்துமா என்பது குறித்து, A-1 PW-4-ஐ மட்டுமே அடித்தார் என்றும், இறந்தவரை தாக்கவில்லை என்றும், A-2-ஐ தாக்கும்படி தூண்டவில்லை என்றும் கண்டறிந்தது. எனவே A-1-க்கு சட்டப்பிரிவு 304 Part II சட்டப்பிரிவு 34-உடன் சேர்த்து விதித்த தண்டனை ரத்து செய்யப்பட்டது. A-1-க்கு சட்டப்பிரிவு 324 IPC கீழான தண்டனை மட்டும் உறுதிப்படுத்தப்பட்டு, ஏற்கெனவே அனுபவித்த காலத்துக்கு சமமாக குறைக்கப்பட்டது.

மூன்றாவதாக, A-2-க்கு மரணம் விளைவிக்கும் குற்றம் (சட்டப்பிரிவு 304 Part II IPC) பொருந்துமா என்பது குறித்து, அடி போடும்போது "இவனால்தான் எல்லா சிக்கலும்; இவன் இறந்துவிட்டால் நல்லது" என்று கூறியது சாட்சியங்களில் நிரூபிக்கப்பட்டது என்றும், மண்டை ஓட்டு உடைந்து மூளையில் இரத்தக் கட்டி ஏற்பட்ட காயத்தின் தீவிரம் மரணம் விளைவிக்கும் குற்றத்தை நிரூபிக்கிறது என்றும் நீதிமன்றம் கண்டறிந்தது. அதே நேரத்தில், அரசு அல்லது பாதிக்கப்பட்ட தரப்பிடமிருந்து மேல்முறையீடு இல்லாத காரணத்தால், தண்டனையை சட்டப்பிரிவு 304 Part I-ஆக மாற்ற நீதிமன்றம் மறுத்தது. A-2-ன் தண்டனை ஐந்து ஆண்டிலிருந்து மூன்று ஆண்டு கடுங்காவலாக குறைக்கப்பட்டது. காரணமாக, தகராறு உறவினர்களுக்கிடையேயான எல்லைப் பிரச்சினையில் தொடங்கியது, பயன்படுத்திய கட்டை அங்கு கிடந்ததே அன்றி வேண்டுமென்று கொண்டு

வரவில்லை, கோபத்தின் உச்சத்தில் ஒரே ஒரு அடி மட்டுமே போட்டார் என்பதை நீதிமன்றம் கருத்தில் கொண்டது.

இந்த தீர்ப்பின் மூலம்,

**"சூடான வாக்குவாதத்தில் 'Bastard' என்று திட்டுவது மட்டும் ஆபாச வார்த்தையாகாது; பொதுநோக்கம் நிரூபிக்க நேரடி ஆதாரம் அவசியம்; கோபத்தின் உச்சத்தில் ஒரே அடியில் மரணம் ஏற்பட்டால் சூழ்நிலையை கணக்கில் கொண்டு தண்டனையை குறைக்கலாம்"**

என்ற முக்கியமான சட்டக் கொள்கைகளை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

Criminal Appeal Nos. 1807 of 2019 & 677 of 2020

Sivakumar & Senthil v. State Rep. by the Inspector of Police

Coram: Justice Pamidighantam Sri Narasimha & Justice Manoj Misra

Date: 06.04.2026

Citation: (2026) INSC 318

# #4#

**மணமான ஒரு வருடத்திற்குள் மனைவி தற்கொலை செய்துகொண்டால், வரதட்சணை கோரிய துன்புறுத்தல் நடந்தது என்று தானாகவே முன்அனுமானம் எழுமா? அதற்கு முன்பு அடிப்படை உண்மைகளை நிரூபிக்க வேண்டுமா?**




இவ்வழக்கில், வலதி காவல் நிலையம் குற்றவழக்கு எண் 31/2017-ல் பதிவான வழக்கு ஆகும். A-1 தாஸ் என்பவர் 18.04.2014 அன்று லட்சுமியை திருமணம் செய்துகொண்டார். திருமணத்தின்போதே A-1 முதல் A-3 வரையிலான குற்றவாளிகளின் கோரிக்கைப்படி 2½ பவுன் தங்கமும் ரூபாய் 50,000-உம் வரதட்சணையாக வழங்கப்பட்டது. திருமணத்திற்குப் பிறகு A-1 மற்றும் அவரது பெற்றோரான A-2, A-3 ஆகியோர் மேலும் 2½ பவுன் தங்கமும் ரூபாய் 50,000-உம் கோரி மனைவியை தொடர்ந்து துன்புறுத்தினர் என்று குற்றச்சாட்டு கூறியது.

25.02.2016 அன்று மனைவியின் சகோதரி (PW-2) வீட்டிற்கு வந்தபோது குற்றவாளிகள் வரதட்சணை

கொடுக்காவிட்டால் வீட்டில் இருக்க விடமாட்டோம் என்று மிரட்டினர். PW-2 பதினைந்து நாளில் ஏற்பாடு செய்கிறேன் என்று சமரசம் செய்தார். அடுத்த நாள் 26.02.2016 அதிகாலை 6 மணிக்கு மீண்டும் துன்புறுத்தல் நடந்து A-1 மனைவியை கீழே தள்ளி காயப்படுத்தினார் என்றும், அதன் காரணமாக மனைவி விஷம் குடித்தார் என்றும் குற்றச்சாட்டு கூறியது. A-1 அதிகாலை 7:20 மணிக்கு மனைவியை அரசு மருத்துவமனையில் சேர்த்தார். ஆனால் சிகிச்சை பலனின்றி காலை 8 மணிக்கு மனைவி உயிரிழந்தார்.

மனைவியின் அன்னை (PW-1) புகார் அளித்தார். வருவாய் கோட்ட அதிகாரி (PW-16/RDO) விசாரணை நடத்தி, வரதட்சணை அல்லது வரதட்சணை தொடர்பான துன்புறுத்தல் காரணமாக மரணம் ஏற்பட்டதாக கருத முதல் நிலை சான்று எதுவும் இல்லை என்று அறிக்கை அளித்தார். ஆனால் துணை கண்காணிப்பாளர் (PW-18/DSP) மரணப் பரிசோதனை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு குற்றத்தை சட்டப்பிரிவு 498A மற்றும் 304B IPC ஆக மாற்றி குற்றவாளிகளை கைது செய்தார். விசாரணை நீதிமன்றம் A-2 மற்றும் A-3-ஐ விடுதலை செய்தது. ஆனால் A-1-ஐ சட்டப்பிரிவு 498A, 304B IPC மற்றும் வரதட்சணை தடுப்புச் சட்டம் சட்டப்பிரிவு 4 கீழ் தண்டித்து ஏழு ஆண்டு கடுங்காவல் விதித்தது. இதை எதிர்த்தே இந்த மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட்டது.

A-1 தரப்பில், வரதட்சணை கோரிக்கை குறித்து எந்த சான்றும் இல்லை என்றும், மரணத்திற்கு சற்று முன்பு வரதட்சணை தொடர்பான துன்புறுத்தல் நடந்தது என்பதற்கு எந்த நிரூபணமும் இல்லை என்றும், RDO விசாரணையிலேயே முதல் நிலை சான்று இல்லை என்று கண்டறியப்பட்ட பிறகு DSP குற்றத்தை மாற்றியது தவறானது என்றும் வாதிடப்பட்டது. மேலும், சான்றிதழ் சாட்சிகளான PW-5, PW-6, PW-10, PW-11 மற்றும் சம்பவ இடத்திற்கு அருகில் வசித்த தனிப்பட்ட சாட்சிகளான PW-7 முதல் PW-9 வரை அனைவரும் விரோதமான சான்று அளித்தனர் என்றும், மரணப் பரிசோதனை அறிக்கையில் பல முரண்பாடுகள் உள்ளன என்றும்

சுட்டிக்காட்டப்பட்டது. அரசு தரப்பில், PW-1 மற்றும் PW-2 வரதட்சணை துன்புறுத்தல் குறித்து சான்று அளித்தனர் என்றும், மரணப் பரிசோதனையில் காயங்கள் இருப்பதால் சாட்சியம் வலுப்பெறுகிறது என்றும், A-1 முன்அனுமானத்தை மறுக்க எந்த சான்றும் தாக்கல் செய்யவில்லை என்றும் வாதிடப்பட்டது.

உயர்நீதிமன்றம் அனைத்து சாட்சியங்களையும் விரிவாக ஆய்வு செய்தது. PW-5 முதல் PW-11 வரை அனைவரும் விரோதமான சான்று அளித்தனர் என்றும், தனிப்பட்ட சாட்சிகளான PW-7 முதல் PW-9 வரை வரதட்சணை கோரிக்கை அல்லது துன்புறுத்தல் குறித்து எதுவும் கூறவில்லை என்றும் கண்டறிந்தது. மிக முக்கியமாக, குற்றம் நடந்த நாளே காலை 8 மணிக்கு மனைவி உயிரிழந்தபோதும், PW-1 தனது சாட்சியத்தில் மூன்று நாட்கள் மருத்துவமனையில் இருந்தார் என்று கூறியது முற்றிலும் தவறானது என்று நீதிமன்றம் சுட்டிக்காட்டியது. அவசர சிகிச்சை பதிவேட்டில் (Ex.P9) எந்த காயமும் குறிப்பிடப்படவில்லை என்றும், சிகிச்சை அளித்த மருத்துவரிடம் எந்த துன்புறுத்தல் பற்றியும் தெரிவிக்கவில்லை என்றும் நீதிமன்றம் முக்கியமாக குறிப்பிட்டது.

மரணப் பரிசோதனை அறிக்கை (Ex.P8) குறித்து, அது சம்பவம் நடந்த நாளிலிருந்து இரண்டு நாட்கள் கழித்து 29.02.2016 அன்று மட்டுமே தயாரிக்கப்பட்டது என்றும், அதில் மருத்துவரின் முத்திரை விவரங்கள் இல்லை என்றும், பிறகு சேர்க்கப்பட்ட உடல் கீறல்கள் வலிப்பு காரணமாகவும் ஏற்பட்டிருக்கலாம் என்று இரண்டு மருத்துவர்களுமே ஒப்புக்கொண்டனர் என்றும் நீதிமன்றம் கண்டறிந்தது. மேலும், மீட்கப்பட்ட காலி பூச்சிக்கொல்லி பாட்டிலின் (MO1) தயாரிப்பு தேதி 07.11.2016 என்று இருக்க, சம்பவம் நடந்த 26.02.2016-க்கு பிறகு தயாரிக்கப்பட்டது என்று காண்பிக்கப்பட்டது — இது முழு மீட்பு நடவடிக்கையையே சந்தேகத்திற்குரியதாக ஆக்குகிறது என்று நீதிமன்றம் கூறியது.

PW-1-இன் சாட்சியம் RDO விசாரணையில் அளித்த வாக்குமூலத்திற்கு முற்றிலும் முரண்பட்டது என்றும், PW-2 25.02.2016 அன்று வீட்டிற்குச் சென்றதாகவோ அல்லது அந்த நாள்

வரதட்சணை கோரப்பட்டதாகவோ சாட்சியத்தில் கூற-வில்லை என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. சட்டப்பிரிவு 113B சாட்சியச் சட்டம் கீழ் முன்அனுமானம் எழ வேண்டு-மென்றால், மரணத்திற்கு சற்று முன்பு வரதட்சணை கோரி துன்புறுத்தல் நடந்தது என்ற அடிப்படை உண்மை-களை முதலில் நிரூபிக்க வேண்டும் என்று நீதிமன்றம் வலியுறுத்தியது. இவ்வழக்கில் அந்த அடிப்படை உண்மைகளே நிரூபிக்கப்படவில்லை என்பதால் முன்அனுமானம் எழவே வாய்ப்பில்லை என்று தெளிவுப-டுத்தியது.

இதன் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் எடுத்த முடிவு பிழையா-னது என்று கூறி, A-1-க்கு விதிக்கப்-பட்ட தண்டனையை ரத்து செய்து குற்றவியல் மேல்முறையீடு அனுமதிக்-கப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம்,

"சட்டப்பிரிவு 304B IPC மற்றும் சாட்சியச் சட்டம் சட்டப்பிரிவு 113B கீழ் முன்அனுமானம் எழ, மரணத்-திற்கு சற்று முன்பு வரதட்சணை கோரி துன்புறுத்தல் நடந்தது என்ற அடிப்படை உண்மைகளை முதலில் நிரூபிக்க வேண்டும்; அவை நிரூபிக்கப்-படாமல் முன்அனுமானத்தை மட்டும் எழுப்ப முடியாது"

என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

Crl.A.No.284 of 2022

Das @ Pragalathan v. State Rep. by the Deputy Superintendent of Police, Gingee Police Sub Division, Valathi Police Station, Villupuram District

Coram: Justice G. Arul Murugan

Date: 30.03.2026

Citation: 2026:MHC:1273

-------------------------------------------

# #5#

***வாடகைதாரர் தானே வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்த பிறகும் வீட்டை காலி செய்யாவிட்டால், வாடகைக்கு விடுபவர் இரட்டிப்பு வாடகை இழப்பீடு கோரலாமா? மேலும், சிறப்பு சட்டத்தின் கீழ் ஒருமுறை தீர்வு பெற்ற பிறகு, அதே விஷயத்தில் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யலாமா?***




இவ்வழக்கில், புஷ்பவல்லி சுரேஷ் பாபு என்ற கட்டிட உரிமையாளர், M/s. Sopos Technology Pvt. Ltd. என்ற நிறுவனத்திற்கு 18.01.2019 அன்று வாடகை ஒப்பந்தம் மூலம் வணிக வளாகத்தை வாடகைக்கு வழங்கினார். வாடகை 15.02.2019 அன்று தொடங்கியது. ஆரம்பத்தில் மாத வாடகை ரூபாய் 2,70,000 என நிர்ணயிக்கப்பட்டு, பின்னர் ரூபாய் 4,13,000 ஆக உயர்த்தப்பட்டது. வாடகைதாரர் ரூபாய் 31,60,000 முன்பணம் செலுத்தினார். ஒப்பந்தத்தில் மூன்று ஆண்டு lock-in காலமும் நிர்ணயிக்கப்பட்டது. வாடகைதாரர் ஒரு ஆண்டுக்கும் மேலாக வாடகை செலுத்திய பிறகு, கோவிட்-19 காரணமாக வணிக இழப்பு ஏற்பட்டதாக கூறி மே 2020-ல்

கடைசியாக வாடகை செலுத்தினார். 07.07.2020 அன்று வாடகைதாரர் தானே வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்யும் அறிவிப்பு வழங்கினார். பிறகு முன்பணத்தை திரும்ப கோரி சட்ட அறிவிப்பும் அனுப்பினார். ஆனால் வளாகத்தை உண்மையில் காலி செய்யாமல் திறவுகோலை தக்க வைத்துக்கொண்டார். இறுதியாக அக்டோபர் 2022-ல் வெளியேற்றல் நடவடிக்கை மூலம் வளாகம் மீட்கப்-பட்டது.

கட்டிட உரிமையாளர் XVI சிறு வழக்கு நீதிமன்றத்தில் TNRRRLT சட்டம் சட்டப்பிரிவுகள் 21(2)(a), 21(2)(b), 21(2)(d) மற்றும் சட்டப்பிரிவு 23 கீழ் வெளியேற்றல் மனுவும், இரட்டிப்பு வாடகை இழப்பீடும் கோரினார். வாடகை கட்டுப்பாட்டு நீதிமன்றம் சட்டப்பிரிவு 21(2)(a) கீழ் வெளி-யேற்றல் உத்தரவிட்டது. ஆனால் சட்டப்பிரிவு 23 கீழ் இரட்டிப்பு வாடகை கோரிக்கையை தள்ளுபடி செய்தது. மேல்முறையீட்டில், மேல்-முறையீட்டு நீதிமன்றம் வெளியேற்-றலை உறுதிப்படுத்தியது; ஆனால் இரட்டிப்பு வாடகைக்கு பதிலாக வெறும் மாத வாடகை மட்டும் செலுத்தும்படி உத்தரவிட்டது. இதற்-கிடையில் வாடகைதாரர் முன்பணம் திரும்பப் பெற TNRRRLT சட்டம் சட்டப்பிரிவு 24 கீழ் கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தார். ஆனால் வாடகை நிலுவை ரூபாய் 61,95,000 ஆக இருப்பதால் அது முன்பணமான ரூபாய் 21,60,000-ஐ விட அதிகம் என்று கூறி அந்த மனு நிராகரிக்கப்பட்டது. அந்த உத்தரவை எதிர்த்த திருத்தல் மனுவும் பின்வாங்-கப்பட்டது. அதன் பிறகு, வாடகை-தாரர் XVII கூடுதல் நகர உரிமையியல் நீதிமன்றத்தில் முன்பணம் திரும்பப் பெற O.S.No.4058/2022 என்று தனி வழக்கு தாக்கல் செய்தார். கட்டிட உரிமையாளர் அந்த வழக்கை நிராக-ரிக்கக் கோரிய விண்ணப்பம் விசாரணை நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. இந்த மூன்று விஷயங்-களிலும் திருத்தல் மனுக்கள் உயர்நீதி-மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டன.

கட்டிட உரிமையாளர் தரப்பில், வாடகைதாரர் தானே வாடகை ஒப்பந்தத்தை ரத்து செய்த பிறகும் வளாகத்தை காலி செய்யாமல் திறவு-

கோலை தக்க வைத்துக்கொண்டதால் TNRRRLT சட்டம் சட்டப்பிரிவு 23 கீழ் இரட்டிப்பு வாடகை இழப்பீடு வழங்கப்பட வேண்டும் என்றும், ஒப்பந்தம் பதிவு செய்யப்படாவிட்டாலும் வாடகை அளவு இரு தரப்பாலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளதால் சட்டப்பிரிவு 23 பொருந்தும் என்றும் வாதிடப்பட்டது. மேலும், முன்பணம் திரும்பப் பெறும் விஷயத்தில் கட்டுப்பாட்டு நீதிமன்றத்தில் ஏற்கெனவே முடிவு எடுக்கப்பட்டு அது இறுதியாகிவிட்டதால் உரிமையியல் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தாக்கல் செய்வது சட்டத்தை தவறான வழியில் பயன்படுத்துவது என்றும் வாதிடப்பட்டது. வாடகைதாரர் தரப்பில், தான் வளாகத்தை காலி செய்தே விட்டதாகவும், கட்டிட உரிமையாளர் திறவுகோல் பெற மறுத்ததால் அடையாள அனுபவ உரிமை கட்டிட உரிமையாளருக்கே கொடுக்கப்பட்டுவிட்டது என்றும், 11.09.2020 அன்று கட்டிட உரிமையாளர் வளாகத்தை வாடகைக்கு விட செய்தி வெளியிட்டதால் அவர் ஏற்கெனவே அனுபவ உரிமை எடுத்துக்கொண்டார் என்றும் வாதிடப்பட்டது.

நீதிமன்றம் மூன்று முக்கியமான கேள்விகளை ஆய்வு செய்தது. முதலாவதாக, சட்டப்பிரிவு 23 இரட்டிப்பு வாடகை குறித்து, இந்த சட்டம் England-ல் நடைமுறையிலிருந்த double rent கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இயற்றப்பட்டது என்றும், வாடகை ஒப்பந்தம் ரத்தாகிய பிறகும் வளாகம் காலி செய்யப்படாவிட்டால் இரட்டிப்பு வாடகை வழங்குவது கட்டாயம் என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. திறவுகோலை தக்க வைத்துக்கொண்டிருக்கும் வரை உண்மையான அனுபவ உரிமை வாடகைதாரர் இடமே இருக்கிறது என்று கண்டறிந்தது. வெறும் அறிவிப்பு கடிதம் அனுப்புவதோ, வளாகத்திற்கு தாழ்ப்பாள் போடுவதோ உண்மையான அனுபவ உரிமை ஒப்படைப்பாகாது என்று தீர்மானித்தது. எனவே கட்டிட உரிமையாளருக்கு ஆகஸ்ட் 2020 முதல் அக்டோபர் 2022 வரை மாதம் ரூபாய் 4,13,000 வீதம் இரட்டிப்பாக இழப்பீடு வழங்க உத்தரவிட்டது.

இரண்டாவதாக, முன்பணம் திரும்பப் பெறும் உரிமை குறித்து, சட்டப்பிரிவு 24 என்பது பொதுச் சட்டத்தில் ஏற்கெனவே இருந்த கட்டிட உரிமையாளரின் கடமையை சட்டரீதியாக அங்கீகரிப்பதால் வாடகைதாரருக்கு இரண்டு வழிகளும் — சிறப்பு சட்டம் மற்றும் உரிமையியல் நீதிமன்றம் — கிடைக்கும் என்றும் கூறியது. ஆனால் ஒரே பரிகாரத்தை இரண்டு நீதிமன்றங்களில் கோர முடியாது என்று வலியுறுத்தியது. வாடகைதாரர் ஏற்கெனவே சட்டப்பிரிவு 24 கீழ் கோரி தோல்வியுற்று, திருத்தல் மனுவும் பின்வாங்கியதால் Election Doctrine (தேர்வு கோட்பாடு) பொருந்தும் என்றும் — State of Rajasthan v. Union of India (2018) 12 SCC 83 மற்றும் National Insurance Co. Ltd. v. Mastan (2006) 2 SCC 641 ஆகிய தீர்ப்புகளை மேற்கோள் காட்டி — இனி உரிமையியல் நீதிமன்றத்தில் அதே விஷயத்தில் வழக்கு தாக்கல் செய்வது அனுமதிக்கப்பட மாட்டாது என்று தெளிவுபடுத்தியது. K.K. Modi v. K.N. Modi (1998) 3 SCC 573 தீர்ப்பை மேற்கோள் காட்டி இது நீதிமன்ற நடைமுறையை தவறாகப் பயன்படுத்துவதாகும் என்றும் கூறியது.

இதன் அடிப்படையில், கட்டிட உரிமையாளர் தாக்கல் செய்த C.R.P.No.4284/2023 அனுமதிக்கப்பட்டு இரட்டிப்பு வாடகை இழப்பீடு வழங்கப்பட்டது. வாடகைதாரர் தாக்கல் செய்த C.R.P.No.2850/2023 தள்ளுபடி செய்யப்பட்டது. உரிமையியல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம்,

**"வாடகை ஒப்பந்தம் ரத்தாகிய பிறகும் வளாகத்தை காலி செய்யாமல் திறவுகோலை வைத்திருந்தால் சட்டப்பிரிவு 23 TNRRRLT Act கீழ் இரட்டிப்பு வாடகை இழப்பீடு வழங்குவது கட்டாயம்; மேலும் சிறப்பு சட்டத்தின் கீழ் ஒருமுறை கோரி தீர்வு பெற்ற பிறகு, அதே விஷயத்தில் உரிமையியல் நீதிமன்றத்தில் மீண்டும் வழக்கு தாக்கல் செய்வது Election Doctrine படி தடுக்கப்படும்"**

என்ற முக்கியமான சட்டக் கொள்கைகளை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

C.R.P.Nos. 4284, 2850 & 3787 of 2023

Pushpavalli Suresh Babhu v. M/s. Sopos Technology Pvt. Ltd.

Coram: Justice N. Sathish Kumar

Date: 29.07.2025

Citation: 2025 (5) CTC 559

#6#

மருத்துவமனை மற்றும் மருத்துவர் இடையே செய்யப்பட்ட தொழில்முறை ஒப்பந்தத்தில் Non-Compete மற்றும் Non-Solicitation விதிகள் சட்டபூர்வமாக செல்லுபடியாகுமா? அத்தகைய ஒப்பந்தத்தில் உள்ள நடுவர் நியமனம் (Arbitration) கோர முடியுமா?




இவ்வழக்கில், MIOT International மருத்துவமனை 2022 செப்டம்பரில் வெளிநாட்டு secondment பணிக்காக ஒரு இதய-நெஞ்சு அறுவை சிகிச்சை நிபுணரை (Cardio Thoracic Surgeon) தேடியது. டாக்டர் பாலராமன் பழனி-

யப்பன் அதற்கு இணங்கினார். 08.09.2022 அன்று தொழில்முறை ஒப்பந்தம் (Professional Agreement) கையெழுத்திடப்பட்டது. அந்த ஒப்பந்தப்படி மருத்துவர் Consultant Cardio Thoracic Surgeon ஆக நியமிக்கப்பட்டார். Fiji-க்கு பல குறுகிய கால பணி நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டன.

ஒப்பந்தத்தில் முக்கியமான Clause 8 — Restrictive Covenants — இடம்பெற்றிருந்தது. அதன்படி, Clause 8.1 — மருத்துவர் அனைத்து இரகசியத் தகவல்களையும் காக்க வேண்டும்; Clause 8.2 — ஒப்பந்தம் முடிந்த பிறகு மூன்று ஆண்டுகள் வரை மருத்துவமனையின் ஊழியர்களை வேறு இடத்தில் சேர்க்க முயலக்கூடாது; Clause 8.3 — ஒப்பந்தம் முடிந்த பிறகு மூன்று ஆண்டுகள் வரை MIOT-இன் 15 கி.மீ. சுற்றளவில் எந்த போட்டி மருத்துவமனையிலும் சேரக்கூடாது அல்லது தனியார் மருத்துவமனை தொடங்கக்கூடாது. Clause 10.2 — மருத்துவர் ஒப்பந்தத்தை ரத்து செய்ய மூன்று மாத அறிவிப்பு அல்லது மூன்று மாத தொழில்முறை கட்டணம் செலுத்த வேண்டும்.

29.01.2024 அன்று மருத்துவர் ராஜினாமா கடிதம் கொடுத்து 29.04.2024 அன்று பணியிலிருந்து விடுவிக்கும்படி கோரினார் — இது மூன்று மாத அறிவிப்பு தேவையை நிறைவு செய்கிறது. ஆனால் மருத்துவமனை கோரிக்கையின்படி அவர் Fiji பணியை முடித்தார். 21.04.2025 அன்று அவர் இறுதியாக மருத்துவமனையை விட்டு விலகுவதாக தெரிவித்தார். பின்னர் அவர் Apollo Speciality Hospital-ல் சேர்ந்தார். இதை மருத்துவமனை Clause 8.3 மீறல் என்று கூறி, ரூபாய் 42 லட்சம் liquidated damages கோரி சட்ட அறிவிப்பு அனுப்பியது. சமரசம் தோல்வியடைந்தது. நடுவர் நியமனம் கோரி உயர்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

மருத்துவமனை தரப்பில், Clause 8.3 மீறப்பட்டதால் ரூபாய் 42 லட்சம் liquidated damages வழங்க மருத்துவர் கடமைப்பட்டிருக்கிறார் என்றும், ஒப்பந்தத்தில் உள்ள நடுவர் விதி (Clause 12.2) படி நடுவர் நியமிக்கப்பட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது. மருத்துவர் தரப்பில், non-compete மற்றும் non-solicitation விதிகள் இந்திய

ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவு 27 மற்றும் 23-ஐ மீறுவதால் அமலாகாது என்றும், எனவே நடுவர் நியமனமே தேவையில்லை என்றும் வாதிடப்பட்டது.

உயர்நீதிமன்றம் இந்த வழக்கை ஆய்வு செய்தபோது, மருத்துவர்களை பொதுவான பணியாளர்களாக நடத்துவது சரியல்ல என்று முதலில் தெளிவுபடுத்தியது. மருத்துவர்கள் சுதந்திரமான தொழில் வல்லுநர்கள் (independent professionals); மருத்துவமனைகள் மருத்துவர்களுக்கு எந்த சிறப்பு பயிற்சியும் அளிப்பதில்லை; மாறாக மருத்துவமனைகள் மருத்துவர்களின் சேவைகளை பயன்படுத்திக்கொள்கின்றன என்று கூறியது. "மருத்துவர்கள் மருத்துவமனை இல்லாமல் இயங்க முடியும்; ஆனால் மருத்துவமனை மருத்துவர்கள் இல்லாமல் இயங்க முடியாது" என்று வலியுறுத்தியது.

Clause 8 — Non-Compete குறித்து, ஒரு மருத்துவமனை மற்றொரு மருத்துவமனையை "போட்டி நிறுவனம்" (rival) என்று அழைப்பதே தவறான கருத்தாக்கம் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. வக்கீல் அலுவலகம் போல, ஒரு வக்கீல் வேறு நிறுவனத்தில் பணிபுரிவதை தடுக்க முடியாது என்ற உவமையை பயன்படுத்தியது. மருத்துவர் தனது சேவைகளை எங்கு வழங்க வேண்டும் என்று தேர்ந்தெடுக்கும் சுதந்திரம் அவருக்கு உண்டு; நோயாளிகள் நம்பிக்கையின் அடிப்படையில் மருத்துவரை அணுகுகிறார்கள், மருத்துவமனையை அல்ல என்றும் குறிப்பிட்டது. எனவே Clause 8.2 மற்றும் 8.3 ஆகிய விதிகள் இந்திய ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவு 23 (பொதுக் கொள்கைக்கு எதிரானது) மற்றும் சட்டப்பிரிவு 27 (தொழில் கட்டுப்பாடு) படி செல்லாத ஒப்பந்த விதிகள் என்று தீர்மானித்தது. அத்தகைய செல்லாத விதிகளை அடிப்படையாகக் கொண்டு நடுவர் நியமனம் கோர முடியாது என்று கூறியது.

Clause 10.2 — மூன்று மாத அறிவிப்பு குறித்து, மருத்துவர் 29.01.2024 அன்றே ராஜினாமா கடிதம் கொடுத்து 29.04.2024 அன்று விடுவிக்கும்படி கோரியதால் மூன்று மாத அறிவிப்பு

ஏற்கெனவே பூர்த்தியாகிவிட்டது என்றும், 21.04.2025 அன்றைய மின்னஞ்சல் ராஜினாமா கடிதம் அல்ல என்றும் நீதிமன்றம் கண்டறிந்தது. ஆகவே Clause 10.2 மீறல் கூட நிரூபிக்கப்படவில்லை என்று தீர்மானித்தது. மருத்துவமனை 29.01.2024 கடிதத்தை ராஜினாமாவாக ஏற்க மறுத்து, அதற்குப் பிறகும் மருத்துவரிடம் Fiji பணி செய்வித்து, பின்னர் அவரை நடுவர் நடைமுறைக்கு இழுப்பது நியாயமற்றது என்று கடுமையாக கண்டித்தது.

இதன் அடிப்படையில், மனு ஒரு லட்சம் ரூபாய் செலவுடன் (costs) தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம்,

"மருத்துவர் மற்றும் மருத்துவமனை இடையே செய்யப்படும் ஒப்பந்தத்தில் Non-Compete மற்றும் Non-Solicitation விதிகள் இந்திய ஒப்பந்தச் சட்டம் சட்டப்பிரிவு 23 மற்றும் 27 படி செல்லாதவை; அத்தகைய செல்லாத விதிகளை அடிப்படையாகக் கொண்டு நடுவர் நியமனம் கோர முடியாது; மருத்துவர்கள் சுதந்திரமான தொழில் வல்லுநர்கள் — அவர்களை பொதுவான பணியாளர்களாக நடத்துவது சட்டத்திற்கு முரணானது"

என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

Arb.O.P.(Com.Div.) No.708 of 2025

MIOT Hospitals Private Limited v. Dr. Balaraman Palaniappan

Coram: Justice N. Anand Venkatesh

Date: 23.02.2026

Citation: 2026:MHC:733

---

## #7#

**வருங்கால வைப்பு நிதி (Provident Fund) பங்களிப்பு பறிமுதல் தொடர்பான பிரச்சினையில் சிவில் நீதிமன்றத்திற்கு நிவாரணம் வழங்கும் அதிகார வரம்பு உள்ளதா? அதே சமயம், 2001 அரசு அறிவிப்பு விமான நிறுவனங்களுக்கு பழைய காலத்திற்கு பின்னோக்கி பயன்படுமா?**




இந்த Second Appeal-ல், NEPC Airlines, NEPC Textiles மற்றும் NEPC Tea Garden ஆகிய மூன்று நிறுவனங்களும் இணைந்து, தங்களிடமிருந்து Rs.90 லட்சம் வருங்கால வைப்பு நிதி பங்களிப்பை அதிகாரிகள் வசூலிப்பதைத் தடுக்கும் நிரந்தர தடையாணை கோரி வழக்கு தொடர்ந்தனர். 22.03.2001 அன்று மத்திய அரசு வெளியிட்ட அறிவிப்பின்படி, 01.04.2001 முதல் மத்திய அல்லது மாநில அரசு உரிமையில் உள்ள விமான நிறுவனங்கள் மட்டும் வருங்கால வைப்பு நிதி சட்டத்திற்கு உட்படாது என்று கூறப்பட்டிருந்தது. இந்த அறிவிப்பை, அதற்கு முன்பு

இருந்த அனைத்து விமான நிறுவனங்களும் வருங்கால வைப்பு நிதிக்கு உட்படவில்லை என்று வாதி தரப்பு தவறாக விளக்கினர்.

அதிகாரிகள் தரப்பில், 1997-ம் ஆண்டே NEPC Micon Ltd-இன் கோரிக்கையின் பேரில் முதல் வாதி சட்டப்பிரிவு 2(A) கீழ் வருங்கால வைப்பு நிதி சட்டத்திற்கு உட்படுத்தப்பட்டதாகவும், பங்களிப்புகள் முறையாக
செலுத்தப்பட்டுள்ளதாகவும், வாதிகள் இன்னும் Rs.2.46 லட்சம் நிலுவை செலுத்தவில்லை எனவும் பதிலுரை அளிக்கப்பட்டது.

வழக்கு விசாரணை நீதிமன்றத்திலும், மேல்முறையீட்டு நீதிமன்றத்திலும் (Sub Court, Coimbatore) வாதிகளுக்கு சாதகமாக முடிவு செய்யப்பட்டது — 2001 அறிவிப்பை வைத்து, 01.04.2001க்கு முன் விமான நிறுவனங்களே வருங்கால வைப்பு நிதிக்கு உட்படவில்லை என்ற தவறான விளக்கத்தை ஏற்று, சிவில் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு உள்ளது எனக் கருதி வழக்கை ஏற்றன.

உயர்நீதிமன்றம் இந்த விளக்கத்தை முற்றிலும் தவறானது என நிராகரித்தது. அறிவிப்பு கூறுவது, 01.04.2001 முதல் மத்திய/மாநில அரசு உரிமையிலான விமான நிறுவனங்கள் மட்டும் விலக்கு பெறுகின்றன என்பதே; தனியார் விமான நிறுவனங்கள் அந்த தேதிக்கு முன்னும் பின்னும் வருங்கால வைப்பு நிதி சட்டத்திற்கு உட்பட்டே இருந்தன என நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

மேலும், வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் சட்டப்பிரிவு 7(A) கீழ், ஒரு நிறுவனத்திற்கு சட்டம் பொருந்துமா என்ற சர்ச்சையை தீர்மானிக்கவும், நிலுவை தொகையை நிர்ணயிக்கவும் Provident Fund Commissioner-க்கே அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. சட்டப்பிரிவு 7(D) கீழ், Industrial Disputes Act, 1947-ன் கீழ் அமைக்கப்பட்ட Industrial Tribunal-ஐ மட்டுமே இந்த தகராறுகளுக்கான தீர்ப்பாயமாக நியமிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த விவகாரங்களை சிவில் நீதிமன்றம் விசாரிக்க முடியாது என்றும், Union of India Vs. Narayan (1989 LAB.I.C. 854) தீர்ப்பை மேற்கோள் காட்டி,

சட்டப்பிரிவு 7(A) கீழ் வழங்கப்படும் உத்தரவை சவால் செய்ய வேண்டு-மெனில் அரசியலமைப்பு சரத்து 226/227 கீழ் மட்டுமே செல்ல வேண்டும் என்றும், சிவில் நீதிமன்-றத்தின் அதிகார வரம்பு வெளிப்ப-டையாக விலக்கப்பட்டுள்ளது என்றும் நீதிமன்றம் உறுதிப்படுத்தியது.

இறுதியாக, விசாரணை நீதிமன்றமும் மேல்முறையீட்டு நீதிமன்றமும் தங்-களை தாமே தவறாக வழிநடத்திக் கொண்டு அதிகார வரம்பை ஏற்றுக்-கொண்டது தவறு என்று கூறி, இரு நீதிமன்றங்களின் கட்டளைகளும் ரத்து செய்யப்பட்டன. O.S.No.2585 of 2004 வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது. Second Appeal அனைத்து செலவு-களுடன் அனுமதிக்கப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், வருங்கால வைப்பு நிதி சட்டத்தின் கீழ் எழும் தகராறுகளை விசாரிக்க சிவில் நீதிமன்றத்திற்கு அதிகார வரம்பு இல்லை என்றும், அத்தகைய தகராறுகள் Section 7(A) நடைமுறை மற்றும் அரசியலமைப்பு சரத்து 226/227 மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்றும் உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்-தியுள்ளது.**

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

S.A.No.582 of 2009

The Commissioner, Provident Fund Organisation & Ors v. M/s. NEPC Air-lines & Ors

Coram: Justice C.V. Karthikeyan

Date: 18.07.2025

Citation: 2025 (5) CTC 576

---

#8#

**நீதிமன்றம் ஆவணங்களை தாக்கல் செய்யும்படி உத்தரவிட்டும், கையில் வைத்திருந்தும் தாக்கல் செய்யாத பிரதிவாதிக்கு எதிராக பாதகமான முன்அனுமானம் கொள்ளலாமா? மேலும், கூட்டாண்மை நிறுவனத்தில் உண்மையான பங்குதாரரின் ஒப்புதல் இல்லாமல் புதிய கூட்டாண்மை பத்திரம் செல்லுமா?**




இந்த வழக்கில், Chettige Estate என்ற கூட்டாண்மை நிறுவனம் 1976-ல் வாதியின் தந்தை தண்ணீர்மலை செட்டியாரால் தொடங்கப்பட்டது. வாதி M. சிவகலை, 01.04.1986 முதல் 20% பங்கு மூலம் நிறுவனத்தில் பங்குதாரராக சேர்க்கப்பட்டார். இதற்கிடையில், முதல் பிரதிவாதியின்

சகோதரர் T. சுப்பிரமணியன் சிறுவனாக இருந்ததால், அவரது பங்கு வாதியின் பெயரில் "பினாமி" முறையில் பதிவு செய்யப்பட்டதாக இரண்டாம் பிரதிவாதி T. அருணாச்சலம் வாதிட்டார். தண்ணீர்மலை செட்டியார் இறந்த பின்னர் M. சிவகலை, T. அருணாச்சலம் மற்றும் T. மீனாட்சி ஆச்சி ஆகியோர் நிறுவனத்தில் தொடர்ந்து பங்குதாரர்களாக இருந்தனர்.

பின்னர் T.அருணாச்சலம், T. சுப்பிரமணியனுக்கு Power of Attorney வழங்கினார். M. சிவகலை எதிர்ப்பு தெரிவித்தபோது, "நீங்கள் பங்குதாரர் இல்லை" என்ற பதில் அறிவிப்பு வழங்கப்பட்டது. இதனால் M. சிவகலை நிறுவனத்தை கலைத்து கணக்கு வழங்கக் கோரி வழக்கு தொடர்ந்தார்.

T. அருணாச்சலம் தரப்பில், M. சிவகலையின் பங்கு 31.03.1999 அன்று T. சுப்பிரமணியனுக்கு மீண்டும் மாற்றப்பட்டதாகவும், நாள் ஏட்டில் இது பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும், வழக்கு தாக்கல் செய்த நாளில் M. சிவகலை பங்குதாரரே இல்லை என்றும், T. சுப்பிரமணியனை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு நடைபெற முடியாது என்றும் வாதிடப்பட்டது. மேலும், 03.10.2000 அன்று பதிவு செய்யப்பட்ட ஆவணம் M. சிவகலை பங்குதாரர் இல்லை என்பதை நிரூபிக்கிறது என்றும் கூறப்பட்டது.

விசாரணை நீதிமன்றம், T. அருணாச்சலம் எழுதிய Ex.A3 முதல் A6 வரையிலான கடிதங்களை ஆதாரமாக கொண்டு, M. சிவகலை 01.04.1986 முதல் பங்குதாரர் என்றும், இதுவரை வெளியேற்றப்படவில்லை என்றும் கண்டறிந்து M. சிவகலைக்கு சாதகமாக தீர்ப்பளித்தது. ஆனால், முதல் மேல்முறையீட்டு நீதிமன்றம் (சார்பு நீதிமன்றம், தேவக்கோட்டை), அந்த கடிதங்கள் T. சுப்பிரமணியனுடன் நடந்த தகராறால் எழுதப்பட்டவை என்று கூறி நம்பகத்தன்மையற்றதாக கருதியது. மேலும், T. சுப்பிரமணியன் பங்குதாரராக இருப்பதால் அவரை வழக்கில் சேர்க்காதது வழக்கை பாதிக்கும் என்று கூறி வழக்கை தள்ளுபடி செய்தது. இதையே எதிர்த்து Second Appeal தாக்கல் செய்யப்பட்டது.

உயர்நீதிமன்றம், முக்கியமான ஆவண ஆதாரங்களை ஆய்வு செய்தது. Ex.A3 முதல் A6 வரையிலான கடிதங்கள், T. அருணாச்சலத்தால் 04.05.2000 அன்று T. சுப்பிரமணியனுக்கும், நிறுவன மேலாளருக்கும், தணிக்கையாளருக்கும், வாடிக்கையாளர்களுக்கும் அனுப்பப்பட்டவை. அந்த கடிதங்களில் T. சுப்பிரமணியனுக்கு வழங்கப்பட்ட Power of Attorney ரத்து செய்யப்பட்டதாகவும், அவர் வெறும் முகவர் மட்டுமே என்றும், M. சிவகலை உண்மையான பங்குதாரர் என்றும் தெளிவாக கூறப்பட்டிருந்தது. T. அருணாச்சலம், T. சுப்பிரமணியனை 31.03.1999 முதல் பங்குதாரர் என்று வாதிட்டிருந்தாலும், மேற்கண்ட கடிதங்கள் 04.05.2000 அன்று எழுதப்பட்டவை என்பதால் அந்த வாதம் ஏற்றுக்கொள்ள முடியாதது என்று நீதிமன்றம் கண்டறிந்தது.

மேலும், நாள் ஏடு மற்றும் வருமான வரி தாக்கல் ஆவணங்களை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டும், T. அருணாச்சலம் அவற்றை தாக்கல் செய்யவில்லை. Union of India Vs. Ibrahim Uddin (2012) 8 SCC 148 தீர்ப்பை மேற்கோள் காட்டி, ஆவணங்களை தாக்கல் செய்யாமல் மறைத்தால் பாதகமான முன்அனுமா-னம் எழும் என்று நீதிமன்றம் கூறியது. அத்தகைய முன்அனுமானம் இவ்வ-ழக்கில் T. அருணாச்சலமுக்கு எதிரான சான்றாக கருதப்பட்டது.

Benami Transactions (Prohibition) Act-ஐ மேற்கோள் காட்டி, பங்கு M. சிவகலையின் பெயரில் "பெயர் கடன்" முறையில் மட்டுமே மாற்றப்பட்டது என்ற வாதம் சட்டரீதியாக ஏற்கத்தக்கதல்ல என்று கூறியது. T. சுப்பிரமணியன் பங்குதாரர் இல்லை என்று கடிதங்கள் நிரூபிக்கும் நிலையில், அவரை வழக்கில் சேர்க்காதது வழக்கை பாதிக்கும் என்று கூறிய மேல்முறையீட்டு நீதிமன்றத்தின் கண்டுபிடிப்பு தவறானது என நிராகரிக்கப்பட்டது. M. சிவகலையின் ஒப்புதல் இல்லாமல் 28.01.2002 அன்று பதிவு செய்யப்பட்ட புதிய கூட்டாண்மை பத்திரமும் T. அருணாச்சலமை கடமையிலிருந்து விடுவிக்காது என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இதனடிப்படையில், Second Appeal அனுமதிக்கப்பட்டது. முதல் மேல்-முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளை ரத்து செய்யப்பட்டு, விசாரணை நீதிமன்றத்தின் தீர்ப்பு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், "கூட்டாண்மை நிறுவனத்தில் ஆவ-ணங்களை தாக்கல் செய்யாத பிரதிவாதிக்கு எதிரான பாதகமான முன்அனுமானம் செல்லுபடியாகும்; Benami முறையில் மாற்றப்பட்டது என்ற வாதம் சட்டரீதியாக ஏற்கத்தக்கதல்ல; மேலும் உண்மை-யான பங்குதாரரின் ஒப்புதல் இல்லாமல் புதிய கூட்டாண்மை பத்திரம் செல்லாது" என்ற முக்கியமான சட்டக் கொள்கைகளை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

BEFORE THE MADURAI BENCH OF MADRAS HIGH COURT

S.A.(MD)No.220 of 2007

M. Sivakalai v. Chettige Estate & Ors

Coram: Justice R. Vijayakumar

Date: 25.07.2025

Citation: 2025 (5) CTC 583

---

## #9#

**காலவரையத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்ததை நிரூபிக்காமல் தாக்கல் செய்யப்பட்ட ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்படுமா? மேலும், பாகவழக்கில் நிலுவையான சொத்தை ஒரு தரப்பு மற்றொரு தரப்புக்கு விற்க உரிமை இல்லாதபோது செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நீதிமன்றம் நிறைவேற்றும்படி உத்தரவிட முடியுமா?**




இந்த வழக்கில், V. சந்திரா என்பவர் 19.01.1994 அன்று R. கஸ்தூரி பாய் மற்றும் அவரது தந்தை ராமகிருஷ்ண ரெட்டியாரிடமிருந்து 8805 சதுர அடி நிலம் மற்றும் 1800 சதுர அடி பாதை உரிமை (pathway) ஆகியவற்றை Rs.10,50,000/- மதிப்பில் வாங்க ஒப்பந்தம் செய்தார். Rs.2,00,000/- முன்பணமாக பெறப்பட்டது. ஒப்பந்-தத்தில் இரு முக்கியமான நிபந்தனை-கள் விதிக்கப்பட்டன — வருமான வரி தகுதிப்படுத்தல் சான்றிதழ் பெறுவ-

தும், பாதையிலுள்ள ஆக்கிரமிப்பை அகற்றுவதும். ஒப்பந்தம் முடிக்க ஆறு மாதங்கள் நிர்ணயிக்கப்பட்டன. இதே-காலகட்டத்தில், ராமகிருஷ்ண ரெட்டி-யாரின் மகன் A.R. பாலகிருஷ்ணன் அதே சொத்தை உள்ளடக்கி O.S.No.206/1987 என்ற பாகவழக்கு சார்பு நீதிமன்றம், பூனமல்லி-ல் நிலுவையில் இருந்தது. அந்த வழக்கில் 09.02.1994 அன்று A.R. பாலகிருஷ்ணனுக்கு ½ பங்கு வழங்கும் முதல்நிலை உத்தரவு வழங்கப்பட்-டிருந்தது.

இந்த நிலையில் V. சந்திரா, அதே ஒப்பந்தத்தை அடிப்படையாக கொண்டு 27.06.1996 அன்று R.V. அருளிடம் Rs.14,00,000/- மதிப்பில் அந்த சொத்தை விற்பனை செய்ய தனி ஒப்பந்தம் செய்தார். R.V. அருள் Rs.6,25,000/- முன்பணமாக செலுத்தி, சொத்தின் அசல் ஆவணங்களையும் வைத்திருந்தார். பின்னர், V.சந்திரா 24.04.2001 அன்று ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு தொடர்ந்தார் — அதாவது ஒப்பந்த தேதியிலிருந்து ஏழு ஆண்டுகள் கடந்த பின்னர். வழக்கு தொடர்ந்தபோது ராமகிருஷ்ண ரெட்-டியார் காலமானதால் அவரது மகள்கள் (5 முதல் 7 ஆம் பிரதிவாதிகளாக) சேர்க்கப்பட்டனர்.

கஸ்தூரி பாய் தரப்பில், ஒப்பந்தம் ஆறு மாத காலவரம்புடன் நிர்ணயிக்கப்-பட்டிருந்தது என்றும், 31.12.1996 வரை காலம் நீட்டிக்கப்பட்டதாக காட்-டப்பட்ட ஆவணத்தில் Rs.1,00,000/- எப்போது செலுத்தப்பட்டது என்ற தேதியே இல்லை என்றும், அதே தேதியில் பணம் செலுத்திவிட்டு அதே தேதி வரை காலம் நீட்டித்ததாக கூறுவது தர்க்கமற்றது என்றும் வாதிடப்பட்டது. மேலும், காலவரம்பு 31.12.1996-ல் முடிவடைந்த நிலையில் வழக்கு 30.04.2001 அன்று தாக்கல் செய்யப்பட்டதால் காலவரம்பு சட்டத்-தின் சரத்து 54 படி பாதிக்கப்-பட்டுள்ளது என்றும், R.V. அருளிடம் ஒப்பந்தம் செய்தது வேண்டுமென்றே பாகவழக்கு உத்தரவை தவிர்க்கும் சூழ்நிலையில் திட்டமிட்டு செய்யப்-பட்டது என்றும் வாதிடப்பட்டது.

A.R.பாலகிருஷ்ணன் தரப்பில், பாக-வழக்கில் தனக்கு ½ பங்கு உத்தரவாக வழங்கப்பட்டுள்ள நிலையில், கஸ்தூரி பாய் மற்றும் ராமகிருஷ்ண ரெட்டியார்

அந்த பங்கை உள்ளடக்கிய சொத்தை தன் அனுமதியின்றி விற்க உரிமை இல்லை என்றும், ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு நிறைவேற்ற முடியாத ஒப்பந்தத்தை அடிப்படையாக கொண்டது என்றும் வாதிடப்பட்டது.

V. சந்திரா தரப்பில், ஒப்பந்தத்தில் வருமான வரி சான்றிதழ் மற்றும் ஆக்கிரமிப்பு அகற்றல் என்ற இரு நிபந்தனைகள் பிரதிவாதிகளால் பூர்த்தி செய்யப்படவில்லை என்றதால் காலவரம்பு தொடங்கவில்லை என்றும், வாங்குபவர் ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருப்பதை நிரூபிக்க தன் பொருளாதார சூழ்நிலையை காட்ட வேண்டிய அவசியமில்லை என்றும் வாதிடப்பட்டது.

விசாரணை நீதிமன்றம் (IV Additional City Civil Court, Chennai), காலவரம்பு பாதிக்கவில்லை என்றும், பாகவழக்கு நிலுவையில் இருந்தது காலவரம்பு நடைபெறாமல் தடுத்தது என்றும் கூறி, V. சந்திரா கஸ்தூரி பாய் மற்றும் அவரது தந்தையின் வாரிசுகள் (Defendants 1, 5-7) இடத்தில் புகுந்து பாகவழக்கின் இறுதிகட்டத்தில் பங்கு கோரலாம் என்றும், R.V. அருள் பெயரில் பத்திரம் பதிவு செய்ய உத்தரவிட்டது. உயர்நீதிமன்றம் இந்த முடிவை முற்றிலும் தவறானது என நிராகரித்தது.

நீதிமன்றம் முக்கியமான சட்டக் கொள்கைகளை கீழ்க்கண்டவாறு தெளிவுபடுத்தியது: ஒப்பந்தம் ஆறு மாத காலவரம்புடன் நிர்ணயிக்கப்பட்டிருந்தது; Ex.A5-ல் தேதியில்லாத முறையில் 31.12.1996 வரை காலம் நீட்டிக்கப்பட்டிருந்தாலும், அந்த தேதி வரை V. சந்திரா ஒப்பந்தத்தை நிறைவேற்ற தயாராக இருந்தார் என்று எந்த ஆவணமும் இல்லை. Specific Relief Act சரத்து 16 படி (2018 திருத்தத்திற்கு முன்), வாங்குபவர் காலவரையத்திற்குள் தயாராக இருந்ததை வழக்குரையிலும் நிரூபணத்திலும் காட்ட வேண்டும். V. சந்திரா அதை செய்யவில்லை. காலவரம்பு 31.12.1996-ல் தொடங்கியதால் 31.12.1999-க்குள் வழக்கு தொடர வேண்டியிருந்தது; ஆனால் 30.04.2001 அன்று தாக்கல் செய்யப்பட்டது — இது காலவரம்பு சட்டத்தின் சரத்து 54 படி பாதிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்தம்

செய்த நாளில் பாகவழக்கு நிலுவையில் இருந்ததாலும், R.V. அருளுடன் செய்யப்பட்ட தனி ஒப்பந்தம் சொத்தை A.R. பாலகிருஷ்ணனின் பாகவழக்கு உத்தரவை தவிர்ப்பதற்காக செய்யப்பட்டதாலும், V. சந்திரா Specific Relief Act சரத்து 13 படி மட்டுமே பரிகாரம் கோரலாம் — அதாவது நிறைவேற்ற முடியாத ஒப்பந்தத்திற்கு செலுத்திய முன்பணம் திரும்ப கேட்கலாம்; ஆனால் ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கு தொடர முடியாது. விசாரணை நீதிமன்றம் காலவரம்பு கணக்கீட்டில் தவறு செய்ததோடு, வழக்குரையில் கோரப்படாத பரிகாரத்தை வழங்கியதும் சட்டவிரோதமானது என நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

இதனடிப்படையில், இரண்டு Appeal Suits-ம் அனுமதிக்கப்பட்டன. விசாரணை நீதிமன்றத்தின் 10.04.2023 தேதியிட்ட உத்தரவு ரத்து செய்யப்பட்டது. செலவுகள் மேல்முறையீட்டாளர்களுக்கு வழங்கப்பட்டன.

**இந்த தீர்ப்பின் மூலம், "ஏற்றதை ஆற்றக் கோரிய வழக்கில் காலவரையத்திற்குள் தயாராக இருந்ததை நிரூபிக்காமல் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு காலவரம்பு சட்டத்தால் பாதிக்கப்படும்; பாகவழக்கில் நிலுவையான சொத்தை அனுமதியின்றி விற்க உரிமையற்றவர்களுடன் செய்யப்பட்ட ஒப்பந்தத்தை நிறைவேற்றும்படி உத்தரவிட முடியாது; நீதிமன்றம் வழக்குரையில் கோரப்படாத பரிகாரத்தை வழங்க முடியாது"**

**என்ற முக்கியமான சட்டக் கொள்கைகளை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

A.S.Nos.479 of 2023 & 421 of 2024

R. Kasturi Bai & A.R. Balakrishnan v. V. Chandra & Ors

Coram: Justice Dr. G. Jayachandran

Date: 14.08.2025

Citation: 2025 (5) CTC 590

---

## #10#

**உயில் மீதுள்ள சர்ச்சையான கையொப்பத்தை நிரூபிக்க, நீதிமன்றம் ஒப்புக்கொள்ளப்படாத கையொப்பங்களை Forensic Science Department-க்கு ஒப்பிடுவதற்கு அனுப்பலாமா? இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு 73-ன் கீழ் Forensic ஒப்பீட்டிற்கு பயன்படுத்தப்படும் கையொப்பங்கள் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டதாகவோ நிரூபிக்கப்பட்டதாகவோ இருக்க வேண்டுமா?**




இந்த வழக்கில், Dr. A.S. ராமகிருஷ்ணன் 03.04.2003 அன்று காலமானார். அவரது மகளும் மேல்முறையீட்டாளருமான Tmt. சுதா உமாஷங்கர், தந்தை 29.07.1987 அன்று உயில் எழுதியதாக கூறி Letters of Administration கோரி O.P.No.722 of 2004 தாக்கல் செய்தார். இது பின்னர் T.O.S.No.10 of 2008 என்று testamentary suit-ஆக மாற்றப்பட்டது. வழக்கு விசாரணையில் இருக்கும்-போது, பிரதிவாதிகளான Dr. லட்சுமி ஜெயகுமார் மற்றும் மற்றவர்கள், உயிலில் (Ex.P1) உள்ள கையொப்-

பத்தை, 16.03.1989 அன்றைய Trust Declaration Deeds (Ex.D7, D8), 28.05.1990 அன்றைய Partnership Deed (Ex.D9) மற்றும் 01.02.1971 அன்றைய Release Deed (Ex.P6) ஆகியவற்றில் உள்ள கையொப்பங்களுடன் ஒப்பிட Advocate Commissioner நியமிக்கக் கோரினர். நீதிமன்றம் 26.09.2023 அன்று அதை அனுமதித்தது.

ஆவணங்கள் Forensic Science Department-க்கு அனுப்பப்பட்ட நிலையில், அந்த துறை 19.12.2023 அன்று ஒரு முக்கியமான கடிதம் எழுதியது. அதில், உயில் 1987-ஐ சேர்ந்தது என்றும், ஒப்பிட வழங்கப்பட்ட ஆவணங்கள் 1989 மற்றும் 1990-ஐ சேர்ந்தவை என்றும் கூறி, 1985-1988 காலகட்டத்தில் Dr. ராமகிருஷ்ணன் எழுதிய பதிவு ஆவணங்கள் போன்ற கூடுதல் ஆவணங்கள் தேவை என்றது. இந்த கோரிக்கையின் பேரில், பிரதிவாதிகள் தரப்பு Dr. ஜெயகுமாருக்கு Dr. ராமகிருஷ்ணன் எழுதிய 1985-1986 காலத்து கடிதங்களை கூடுதல் ஆவணங்களாக சமர்ப்பித்தனர். இந்த கடிதங்களை அடிப்படையாக கொண்டு Forensic Science Department 30.01.2024 அன்று உயிலில் உள்ள கையொப்பம் பொருந்தவில்லை என்று அறிக்கை வழங்கியது.

இதற்கிடையில், 08.02.2023 அன்று விசாரணையில் மேல்முறையீட்டாளர் PW1 ஆக சாட்சி அளித்தபோது, அந்த கடிதங்கள் (1985-1986) காட்டப்பட்டு தந்தையின் கையொப்பம் என்று அங்கீகரிக்கிறீர்களா என கேட்கப்பட்டது. அதற்கு மேல்முறையீட்டாளர் "அது அவரது கையெழுத்தைப் போல் தெரிகிறது; ஆனால் உறுதியாகக் கூற முடியவில்லை" என்று மட்டுமே கூறினார். இதன்மூலம் அந்த கடிதங்களிலுள்ள கையொப்பங்கள் ஒப்புக்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகியது.

மேல்முறையீட்டாளர் 24.06.2024 அன்று இந்த Forensic Report-ஐ விலக்கக் கோரி A.No.3153 of 2024 தாக்கல் செய்தார். ஆனால் கீழ்நீதிமன்றம் அதை நிராகரித்தது. இதையே எதிர்த்து இந்த Original Side Appeals தாக்கல் செய்யப்பட்டன.

உயர்நீதிமன்றம், இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு 73-ஐ விரிவாக ஆய்வு செய்தது. அந்த சட்டப்பிரிவு தெளிவாக கூறுவது — சர்ச்சையான கையொப்பத்தை ஆய்வு செய்ய, Forensic ஒப்பீட்டிற்கு பயன்படுத்தப்படும் கையொப்பங்கள் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டதாகவோ (admitted) நிரூபிக்கப்பட்டதாகவோ (proved) இருக்க வேண்டும். இவ்வழக்கில், கடிதங்களிலுள்ள கையொப்பங்கள் மேல்முறையீட்டாளரால் ஒப்புக்கொள்ளப்படவில்லை. ஆகவே, சர்ச்சையான கையொப்பத்தை மற்றொரு சர்ச்சையான கையொப்பத்துடன் ஒப்பிடுவது சட்டப்பிரிவு 73-ன் நோக்கத்திற்கு முரணானது என நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. Forensic Report முடிவானது அல்ல என்று ஒப்புக்கொண்டாலும், அது விசாரணையில் சாதகமாக பயன்படுத்தப்படும் என்பதால், சட்டவிரோதமான ஒப்பீட்டின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட அறிக்கையை நிலைநிறுத்த முடியாது என்று கூறியது.

இதனடிப்படையில், Original Side Appeals அனுமதிக்கப்பட்டன. Forensic Science Department, இனி ஒப்புக்கொள்ளப்பட்ட கையொப்பங்களுடன் மட்டுமே உயிலில் உள்ள கையொப்பத்தை ஒப்பிட்டு நான்கு வாரங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது. அந்த கால இடைவெளி மிக அதிகமாக இருந்தால் அல்லது ஒப்பீடு சாத்தியமில்லை என்றால் அதையும் தெரிவிக்கலாம் என அனுமதி வழங்கப்பட்டது.

**இந்த தீர்ப்பின் மூலம், "இந்திய சாட்சிய சட்டம் சட்டப்பிரிவு 73-ன் கீழ் சர்ச்சையான கையொப்பத்தை Forensic Science Department மூலம் ஆய்வு செய்ய, Forensic ஒப்பீட்டிற்கு பயன்படுத்தப்படும் கையொப்பங்கள் நீதிமன்றத்தால் ஏற்கப்பட்டதாகவோ (admitted) நிரூபிக்கப்பட்டதாகவோ (proved) இருக்க வேண்டும்; ஒப்புக்கொள்ளப்படாத கையொப்பங்களை அடிப்படையாக கொண்ட Forensic Report சட்டவிரோதமானது"**

**என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

O.S.A.Nos.48 & 50 of 2025

Tmt. Sudha Umashankar v. Dr. Lakshmi Jayakumar & Ors

Coram: Justice Dr. Anita Sumanth & Justice N. Senthilkumar

Date: 14.08.2025

Citation: 2025:MHC:1973

## #11#

**வாடகைதாரர், வீட்டு உரிமையாளரை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோருவது தானாகக் கிடைக்கும் உரிமையா? வாக்குமூலத்தில் முன்வைக்கப்படாத புதிய வாதத்தை நிரூபிக்க குறுக்கு விசாரணை அனுமதிக்கப்படுமா?**




இந்த வழக்கில், சென்னை தி.நகர், முகமது உஸ்மான் சாலையில் அமைந்த இடத்தை வாடகைக்கு எடுத்து 2008ஆம் ஆண்டு முதல் வியாபாரம் செய்து வந்த வாடகை-தாரர் கருப்பையா, தமிழ்நாடு வீட்டு

உரிமையாளர்கள் மற்றும் வாடகைதாரர்களின் உரிமைகள் மற்றும் பொறுப்புகள் ஒழுங்குமுறை சட்டம், 2017-ன் சட்டப்பிரிவு 36-ன் கீழ், வீட்டு உரிமையாளர்களை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரி மனு தாக்கல் செய்தார். அந்த மனுவை வாடகை நீதிமன்றம் தள்ளுபடி செய்ததை எதிர்த்தே இந்த திருத்த மனு தாக்கல் செய்யப்பட்டது.

வாடகைதாரர் தரப்பில், முதல் உரிமையாளரின் கணவரும், இரண்டாம் மற்றும் மூன்றாம் உரிமையாளர்களின் தந்தையுமான அமீர் உசேன் ஃபரூக் தன்னுடன் பரிவர்த்தனை செய்து வந்ததாகவும், வாடகை ஒப்பந்தமும் செய்திருந்ததாகவும் வாதிடப்பட்டது. மேலும், சட்டம் அமலுக்கு வந்த பின்னரும், அதாவது 2023ஆம் ஆண்டு வரை, தனக்கு நடைமுறையில் இருந்த வாடகை ஒப்பந்தம் தொடர்ந்ததை நிரூபிக்கவும், வாடகை ஒப்பந்தம் செய்ய தான் தயாராக இருந்ததை நிறுவவும் தான் குறுக்கு விசாரணை தேவை என்றும், எனவே வாடகை நீதிமன்றம் அந்த வாய்ப்பை வழங்கியிருக்க வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

வீட்டு உரிமையாளர்கள் தரப்பில், வாடகைதாரர் இப்போது புதிய வழக்கை எழுப்ப முயற்சிப்பதாகக் கூறப்பட்டது. வாடகை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட பதிலுரையில், உரிமையாளர்களின் கீழ் வாடகைக்கு இருந்ததை வாடகைதாரர் ஒப்புக்கொண்டிருந்தார்; ஆனால் 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை நடைமுறையில் இருந்த ஒப்பந்தம் குறித்து எந்தக் குறிப்பும் அதில் இல்லை. எனவே வாடகை நீதிமன்ற உத்தரவில் எந்தக் குறையும் இல்லை என்று வாதிடப்பட்டது.

நீதிமன்றம், J.Thennarasu Vs Anita Nalliah (CRP(PD).No.2532 of 2021, தேதி 05.08.2022) தீர்ப்பை மேற்கோள் காட்டி, குறுக்கு விசாரணை உரிமை தானாகக் கிடைக்கும் உரிமை அல்ல என்றும், அது வாடகை நீதிமன்றத்தின் முடிவிற்கு உட்பட்டது என்றும் தெளிவுபடுத்தியது. இந்த வழக்கில், பதிலுரையில் வாடகை உறவை வாடகைதாரர் மறுக்கவில்லை; மாறாக, 2008ஆம் ஆண்டு முதல் அந்த

இடத்தை அனுபவித்து வியாபாரம் செய்து வருவதாக மட்டுமே கூறியிருந்தார். 2023ஆம் ஆண்டு ஆகஸ்ட் வரை ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது என்றோ, புதுப்பித்தல் மூலம் வரைவு வாடகை ஒப்பந்தம் அனுப்பப்பட்டது என்றோ, அதிக வாடகை கோரப்பட்டதால் ஒப்பந்தம் நிறைவேற்றப்படவில்லை என்றோ எந்தத் தெளிவான வாதமும் அந்த பதிலுரையில் இடம்பெறவில்லை.

வீட்டு உரிமையாளர்கள் தாக்கல் செய்த RLTOP.No.105 of 2024, சட்டப்பிரிவு 21(2)(a)-ன் கீழ் வாடகை ஒப்பந்தம் செய்யத் தவறியதாகக் குற்றம் சாட்டியது. எனவே, சட்டம் அமலுக்கு வந்த நாளில் நடைமுறையில் ஒரு வாடகை ஒப்பந்தம் இருந்ததா, அதன் விளைவாக வாடகை ஒப்பந்தம் செய்யத் தவறல் ஏற்பட்டதா என்பது மட்டுமே பரிசீலிக்கப்பட வேண்டிய ஒரே பிரச்சினை என்று நீதிமன்றம் குறிப்பிட்டது.

முக்கியமாக, சட்டம் அமலுக்கு வந்த நாளில் அத்தகைய வாடகை ஒப்பந்தம் நடைமுறையில் இருந்தது என்பது வாடகைதாரரின் சொந்த வாதமே அல்ல என்பதை, அவர் தாக்கல் செய்த முழு பதிலுரையிலிருந்தே நீதிமன்றம் கண்டறிந்தது. வாக்குமூலத்தில் இல்லாத ஒரு புதிய வாதத்தைப் பின்னர் எழுப்ப முடியாது என்றும், வாடகை உறவை வாடகைதாரர் ஏற்கனவே ஒப்புக்கொண்டுள்ள நிலையில், தொடர்புடைய நாளில் நடைமுறையில் ஒப்பந்தம் இருந்ததா என்பது மட்டுமே பிரச்சினை என்றும் நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. மேலும், குறுக்கு விசாரணையின் போதே, 2019 பிப்ரவரி 22 அன்று சட்டம் அமலுக்கு வந்த பிறகு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் எதுவும் இல்லை என்று வாடகைதாரரே ஒப்புக்கொண்டிருந்ததால், எவ்வளவு குறுக்கு விசாரணை நடத்தினாலும் அது வாடகைதாரருக்கு உதவப் போவதில்லை என்று குறிப்பிட்டது.

இதன் அடிப்படையில், வாடகை நீதிமன்றம் வழங்கிய உத்தரவில் எந்தக் குறையும் இல்லை எனக் கூறி, திருத்த மனு தள்ளுபடி செய்யப்பட்டது. மார்ச் 2024 முதல் நிலுவையில் உள்ள RLTOP வழக்கை, இந்த உத்தரவின் நகல் கிடைத்த நாளிலிருந்து எட்டு

வாரங்களுக்குள் தகுதியின் அடிப்படையில் முடிவு செய்ய வாடகை நீதிமன்றத்திற்கு உத்தரவிடப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம், **"வாடகை-தாரர் வீட்டு உரிமையாளரை குறுக்கு விசாரணை செய்வது தானாகக் கிடைக்கும் உரிமை அல்ல; அது வாடகை நீதிமன்றத்தின் முடிவிற்கு உட்பட்டது. வாக்குமூலத்தில் முன்வைக்கப்படாத புதிய வாதத்தை நிரூபிக்க குறுக்கு விசாரணை கோர முடியாது"**

என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உயர்நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

CRP.No.1785 of 2025 and C.M.P.No.10306 of 2025

A. Karuppiah Vs Mrs. M. Aminath Rahma & Others

Coram: The Honourable Mr. Justice P.B. Balaji

Date: 06.08.2025

Citation: 2025 (5) CTC 615

---

## #12#

***ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களில், விசாரணை அதிகாரி குற்றம் சாட்டப்பட்டவருக்கு ஆஜராகுமாறு அறிவிப்பு வழங்குவது கட்டாயமா? அந்த அறிவிப்பை ஏற்று ஒத்துழைப்பவரை நேரடியாகக் கைது செய்ய முடியுமா?***




*இந்த வழக்கில், பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா, 2023-ன் (BNSS) சட்டப்பிரிவு 35(3)-ன் கீழ், ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களில் ஆஜராகுமாறு அறிவிப்பு வழங்குவது அனைத்து வழக்குகளிலும் கட்டாயமா என்ற முக்கியமான சட்டக் கேள்வியை உச்சநீதிமன்றம் ஆய்வு செய்தது.*

*மேலும், சட்டப்பிரிவு 35(1)(b)(i) மற்றும் 35(1)(b)(ii)-ல் குறிப்பிடப்பட்ட சூழ்நிலைகள் இல்லாத நிலையில், அத்தகைய குற்றங்களில் காவல் அதிகாரி ஒருவர் கைது செய்வது சட்டப்படி நியாயமானதா என்ற தொடர்புடைய கேள்வியும் பரிசீலிக்கப்பட்டது.*

நீதிமன்றத்திற்கு உதவிய அமிகஸ் கியூரி (amicus curiae) தரப்பில், சட்டப்பிரிவு 35(1)(b)(i) மற்றும் 35(1)(b)(ii)-ல் குறிப்பிடப்பட்ட குறிப்பிட்ட சூழ்நிலைகள் இல்லாதபோது, ஏழு ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்திற்காக ஒருவரைக் கைது செய்வது சட்டப்படி நியாயமல்ல என்று வாதிடப்பட்டது. Arnesh Kumar Vs State of Bihar ((2014) 8 SCC 273) தீர்ப்பை நம்பியிருந்த அமிகஸ், சட்டப்பிரிவு 35(3)-ன் கீழ் அறிவிப்பு வழங்குவது கட்டாயம் என்பதும், வெறுமனே கைதுக்கான காரணங்களைப் பதிவு செய்வதன் மூலம் அதைத் தவிர்த்துவிட முடியாது என்பதும் தெளிவுபடுத்தப்பட வேண்டும் எனக் கோரினார். கைது செய்யும் அதிகாரம் என்பது, அதைப் பயன்படுத்துவதற்கான நியாயத்திலிருந்து வேறுபட்டது என்றும், "குற்றத்தை முறையாக விசாரிப்பதற்காக" என்ற சொற்றொடர் காவல் அதிகாரிக்கு வரம்பற்ற விருப்பதிகாரத்தை வழங்குவதாகப் பொருள் கொள்ள முடியாது என்றும் வாதிடப்பட்டது.

அரசு தரப்பில் ஆஜரான கூடுதல் சொலிசிட்டர் ஜெனரல், சட்டப்பிரிவு 41-A குற்றவியல் நடைமுறைச் சட்டம் (இப்போது BNSS சட்டப்பிரிவு 35) தொடர்பான அறிவிப்பின் கட்டாயத் தன்மை, Arnesh Kumar மற்றும் Satender Kumar Antil Vs CBI ((2022) 10 SCC 51) தீர்ப்புகளில் ஏற்கனவே இறுதியாகத் தீர்மானிக்கப்பட்டுவிட்டது என்றும், சட்டப்பிரிவு 35-ம் அந்தத் தீர்ப்புகளும் கைது அனுமதிக்கப்படும் விதிவிலக்குகளைத் தெளிவாகக் குறிப்பிடுவதால், மேலும் தெளிவுபடுத்தல் தேவையில்லை என்றும் வாதிட்டார்.

நீதிமன்றம் விரிவான பகுப்பாய்வு செய்தது. விசாரணை என்பது கைது இல்லாமலும் தொடரலாம் என்பதையும், கைது என்பது விசாரணையை முன்னெடுக்கும் ஒரு நடவடிக்கையாக இருப்பதால், அது ஒவ்வொரு வழக்கின் உண்மை நிலைக்கேற்ப பயன்படுத்தப்படும் விருப்பத்திற்குட்பட்ட, தேர்வுக்குரிய அதிகாரமே தவிர கட்டாயமல்ல என்பதையும் வலியுறுத்தியது. சட்டப்பிரிவு 35(1)-ல் உள்ள "may" (செய்யலாம்) என்ற சொல், கைது

செய்யும் அதிகாரம் விருப்பத்திற்குட்-பட்டது என்பதைத் தெளிவாக்குகிறது என்று குறிப்பிட்டது.

சட்டப்பிரிவு 35(1)(b)-ன் கீழ் கைது செய்ய, அதில் உள்ள நிபந்தனைகள் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும் என்று நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. காவல் அதிகாரிக்கு "நம்புவதற்கான காரணம்" (reason to believe) இருக்க வேண்டும் என்ற 35(1)(b)(i) நிபந்தனையும், அதனுடன் 35(1)(b)(ii)-ல் உள்ள ஐந்து நிபந்தனைகளில் (மேலும் குற்றம் செய்வதைத் தடுக்க, முறையான விசாரணைக்கு, ஆதாரங்களை அழிப்-பதைத் தடுக்க, சாட்சிகளை மிரட்டு-வதைத் தடுக்க, அல்லது நீதிமன்றத்தில் ஆஜராகுவதை உறுதி செய்ய) குறைந்தபட்சம் ஒன்றாவது இருக்க வேண்டும் என்பதும் கட்டாயம் — இவை இரண்டும் ஒன்றாகப் படிக்கப்பட வேண்டும் என்று கூறியது. இந்த நிபந்தனைகளின் அடிப்படை-யில், கைது செய்வதற்கோ அல்லது வெறுமனே 35(3)-ன் கீழ் அறிவிப்பு வழங்குவதற்கோ, காவல் அதிகாரி தனது காரணங்களை எழுத்துப்பூர்-வமாகப் பதிவு செய்ய வேண்டும்.

Joginder Kumar Vs State of U.P. ((1994) 4 SCC 260) தீர்ப்பை மேற்கோள் காட்டி, சட்டப்படி கைது செய்யும் அதிகாரம் இருப்பதற்கும், அதைப் பயன்படுத்துவதற்கான நியா-யத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை நீதிமன்றம் மீண்டும் வலியுறுத்தியது. வெறும் குற்றச்-சாட்டின் அடிப்படையில், வழக்கமான முறையில் கைது செய்யக்கூடாது; ஒருவரின் சுதந்திரத்தைப் பறிப்பது ஒரு தீவிரமான விஷயம் என்று கூறியது.

சட்டப்பிரிவு 35(5)-ன்படி, அறிவிப்பை ஏற்று தொடர்ந்து ஒத்துழைக்கும் நபரை, கைது அவசியம் என்று காவல் அதிகாரி எழுத்துப்பூர்வமாகக் கார-ணம் பதிவு செய்யாத வரை, கைது செய்ய முடியாது என்பதை நீதிமன்றம் தெளிவுபடுத்தியது. மேலும், சட்டப்-பிரிவு 35(6)-ன்படி, அறிவிப்பை மீறினாலோ அல்லது தன்னை அடையாளம் காட்ட மறுத்தாலோ கூட, அது தானாகவே கைதை கட்டாயமாக்காது; கைது என்பது கடைசி வழிமுறையே தவிர, விருப்பதி-

காரத்தைப் பயன்படுத்திய பின்னரே எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கை என்று கூறியது. இந்த நடைமுறை, அரசியலமைப்பின் சரத்து 21-ன் கீழ் உறுதி செய்யப்பட்ட வாழும் உரிமையின் ஓர் அங்கமான தனிநபர் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் நோக்கத்துடன் அமைந்துள்ளது என்பதையும் நீதிமன்றம் வலியுறுத்தியது.

மிக முக்கியமாக, சட்டப்பிரிவு 35(6)-ன் கீழ் கைது செய்யும்போது, 35(3)-ன் கீழ் அறிவிப்பு வழங்கிய நேரத்தில் இருந்த அதே சூழ்நிலைகளையும் காரணிகளையும் அடிப்படையாகக் கொள்ள முடியாது என்று நீதிமன்றம் தீர்மானித்தது. அறிவிப்பு வழங்கிய நேரத்தில் காவல் அதிகாரியிடம் இல்லாத புதிய ஆதாரங்கள் மற்றும் காரணிகளின் அடிப்படையில் மட்டுமே அத்தகைய கைது நிகழ வேண்டும்; எனவே இந்த அதிகாரம் மிகவும் அரிதாகவே பயன்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டது.

இறுதியாக, ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களில், சட்டப்பிரிவு 35(3)-ன் கீழ் அறிவிப்பு வழங்குவதே "விதி" (rule) என்றும், 35(6)-ன் கீழ் கைது செய்வது வெளிப்படையான "விதிவிலக்கு" (exception) என்றும் நீதிமன்றம் தெளிவாக முடிவு செய்தது. கைது என்பது காவல் அதிகாரியின் அகநிலை வசதிக்காக அல்ல; ஏழு ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கக்கூடிய குற்றத்தில், சம்பந்தப்பட்ட நபரைக் காவலில் எடுக்காமல் விசாரணையை திறம்பட முன்னெடுக்க முடியாது என்று அதிகாரி நிறைவு கொள்ளும்போது மட்டுமே, அது கண்டிப்பான புறநிலை அவசியமாகக் கருதப்பட வேண்டும் என்று வலியுறுத்தியது. Arnesh Kumar தீர்ப்பில் வகுக்கப்பட்ட கொள்கைகள் ஏழு ஆண்டுகள் வரை தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களுக்கும் பொருந்தும் என்றும் உறுதிப்படுத்தப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம், **"ஏழு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றங்களில், ஆஜராகும் அறிவிப்பு வழங்குவதே விதி; கைது என்பது விதிவிலக்கு. கைது செய்யும் அதிகாரம் இருப்பது வேறு, அதைப் பயன்படுத்துவதற்கான நியா-**

**யம் வேறு — அது கட்டாயமல்ல, மாறாக கண்டிப்பான புறநிலை அவசியத்தின் அடிப்படையில் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டிய விருப்பதிகாரம்"** என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் மீண்டும் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

MA No. 2034 of 2022 in MA No. 1849 of 2021 in SLP (Crl.) No. 5191 of 2021 (with connected matter)

Satender Kumar Antil Vs Central Bureau of Investigation & Another

Coram: Justice M.M. Sundresh & Justice Nongmeikapam Kotiswar Singh

Date: 15.01.2026

Citation: 2026 INSC 115 : (2026) 1 CriLR 126 : (2026) SCC OnLine SC 162

---------------------------------------------

## #13#

**ஏழு வயது குழந்தை ஒரே நேரடி சாட்சியாக இருக்கும் நிலையில், சாட்சி பயிற்றுவிக்கப்பட்டது (tutored) என்று கூறி அவரது வாக்குமூலத்தை நிராகரிக்க முடியுமா? வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நிகழும் மரணத்தில், நடந்தது என்ன என்பதை விளக்காமல் மௌனம் காக்கும் கணவன் மீது சாட்சியச் சட்டப்பிரிவு 106-ன்படி நிரூபிக்கும் சுமையை மாற்ற முடியுமா?**




இவ்வழக்கில், மத்தியப் பிரதேச மாநிலம் சிங்காராய் கிராமத்தில், எதிரி பல்வீர் சிங்கின் மனைவி பிரேந்திர குமாரி 15.07.2003 நள்ளிரவில் மரணமடைந்தார். அன்றிரவு அவரது அலறல் சத்தம் கேட்டு சிறிது நேரத்தில் நின்றது; அதே இரவில், குடும்பத்தினருக்கோ கிராமத்தினருக்கோ தெரிவிக்காமல், மறைமுகமாக வயலில் உடல் தகனம் செய்யப்பட்டது. மறுநாள் காலை, தகனம் நடந்த இடத்தில் எலும்புகள், சாம்பல், உடைந்த வளையல்கள் மற்றும் டீசல் கேன் கைப்பற்றப்பட்டன. மரணமடைந்தவரின் ஏழு வயது மகள் ராணி (PW6) மட்டுமே சம்பவத்திற்கு நேரடி

சாட்சியாக இருந்தார். அவர், தனது தந்தை தாயின் கழுத்தைப் பிடித்து, தடியால் அடித்து, கீழே தள்ளி, காலால் கழுத்தை அழுத்தியதைக் கண்டதா-கவும், பின்னர் உடல் வயலுக்கு எடுத்துச் செல்லப்பட்டு எரிக்கப்பட்-டதைக் கண்டதாகவும் வாக்குமூலம் அளித்தார். எதிரிக்கும் மரணமடைந்-தவருக்கும் இடையே திருமணத்திற்குப் பின் மோட்டார் சைக்கிள் வரதட்-சணை கோரிக்கை, தொடர்ந்த கொடு-மை, ஜீவனாம்ச வழக்கு உள்ளிட்ட நீண்டகால பகை நிலவியது ஆவணங்-களால் நிரூபிக்கப்பட்டது.

விசாரணை நீதிமன்றம், ராணியின் சாட்சியத்தை நம்பகமானதாகவும், நீண்ட குறுக்குவிசாரணையிலும் அசையாமல் இருந்ததாகவும் கண்ட-றிந்து, எதிரியை இந்திய தண்டனைச் சட்டப்பிரிவுகள் 302, 201, 34-ன்படி குற்றவாளியாக அறிவித்து ஆயுள் தண்டனை விதித்தது. ஆனால், உயர்-நீதிமன்றம் இந்த தண்டனையை ரத்து செய்து எதிரியை விடுவித்தது. அதன் காரணங்கள்: ராணியின் காவல்துறை வாக்குமூலம் (சட்டப்பிரிவு 161 குற்றவியல் நடைமுறைச் சட்டம்) சம்பவம் நடந்து 18 நாட்கள் தாமதமாகப் பதிவு செய்யப்பட்டது; அப்போது அவர் பகைமையில் இருந்த மாமன் (PW3) வீட்டில் தங்கியிருந்-ததால் பயிற்றுவிக்கப்பட்டிருக்கலாம்; மேலும், மரண விசாரணை (morgue) அறிக்கையில் அவர் "என் தாய் இறந்துவிட்டார்" என்று மட்டுமே கூறியிருந்தார் என்பதையும் சுட்டிக்-காட்டியது.

உச்ச நீதிமன்றம், குழந்தை சாட்சி தொடர்பான சட்டக் கோட்பாடுகளை விரிவாக ஆய்வு செய்தது. சாட்சியச் சட்டப்பிரிவு 118-ன்படி வயது ஒரு தடையல்ல; கேள்விகளைப் புரிந்து-கொண்டு பகுத்தறிவுடன் பதிலளிக்கும் திறன் கொண்ட குழந்தை தகுதியான சாட்சி என, Dattu Ramrao Sakhare v. State of Maharashtra (1997) 5 SCC 341 மற்றும் State of M.P. v. Ramesh (2011) 4 SCC 786 தீர்ப்புகளை மேற்கோள் காட்டியது. குழந்தை சாட்சிக்கு உறுதிப்படுத்தல் (corroboration) கட்டாயமல்ல — அது எச்சரிக்கை நடவடிக்கை மட்டுமே என்று தெளிவுபடுத்தியது. மேலும், "பயிற்றுவிக்கப்பட்ட வாக்குமூலம்"

என்பதை நிரூபிக்க இரண்டு நிபந்தனைகள் — பயிற்றுவிக்கப்பட்டிருக்கும் வாய்ப்பு, மற்றும் பயிற்றுவிக்கப்பட்டதற்கான நியாயமான சாத்தியம் — இரண்டையும் நிரூபிக்க வேண்டும்; வெறும் கூற்று போதாது என வகுத்தது.

தாமதம் குறித்து, **Ranbir v. State of Punjab (1973) 2 SCC 444** தீர்ப்பை மேற்கோள் காட்டி, சாட்சியை தாமதமாக விசாரித்தது குறித்து விசாரணை அதிகாரியிடம் (IO) கேள்வி எழுப்பப்பட்டு விளக்கம் கோரப்பட வேண்டும் என்றும், அத்தகைய கேள்வி எதுவும் கேட்கப்படாத நிலையில் தாமதம் மட்டுமே சாட்சியத்தை நிராகரிக்கக் காரணமாகாது என்றும் கூறியது. இங்கு ராணியின் வாக்குமூலமும், அவரது தாத்தாவின் (PW5) வாக்குமூலமும் ஒரே நாளில் பதிவு செய்யப்பட்டதால், தந்திரமான நோக்கம் இல்லை என்பது தெளிவாகிறது. மேலும், தாயை இழந்து, தந்தை தலைமறைவான நிலையில், ஏழு வயது குழந்தை மாமன் வீட்டில் தங்குவதைத் தவிர வேறு வழி இல்லை; எனவே அந்த ஒரே காரணத்திற்காக சாட்சியத்தை நிராகரிப்பது நடைமுறைத் தவறு என நீதிமன்றம் கடிந்துகொண்டது. மரண விசாரணை அறிக்கையில் "தாய் இறந்துவிட்டார்" என்று மட்டும் கூறியது, பின்னர் அளித்த குற்றச்சாட்டு வாக்குமூலம் பொய் என்பதற்கான அடிப்படையாகாது — ஏனெனில் அந்த விசாரணை அறிக்கை மற்றும் முதல் தகவல் அறிக்கையிலேயே எதிரி காலால் கழுத்தை அழுத்தி கொலை செய்ததாக ராணியின் கூற்று பதிவாகியுள்ளது.

சூழ்நிலைச் சான்று தொடர்பாக **Sharad Birdhichand Sarda v. State of Maharashtra (1984) 4 SCC 116** தீர்ப்பின் கொள்கைகளை நினைவுகூர்ந்த நீதிமன்றம், சாட்சியச் சட்டப்பிரிவு 106-ன் முக்கியத்துவத்தை வலியுறுத்தியது. ஒரு குற்றம் வீட்டின் நான்கு சுவர்களுக்குள் ரகசியமாக நிகழும்போது, நடந்தது என்ன என்பது எதிரியின் சிறப்பு அறிவுக்குள் இருக்கும்; **Trimukh Maroti Kirkan v. State of Maharashtra (2006) 10 SCC 681, Shambhu Nath Mehra v. State of Ajmer (AIR 1956 SC 404)** மற்றும் **State**

of W.B. v. Mir Mohammad Omar (2000) 8 SCC 382 தீர்ப்புகளின்படி, அரசுத் தரப்பு அடிப்படை உண்மைகளை (foundational facts) நிரூபித்துவிட்-டால், அந்த உண்மைகளை விளக்கும் சுமை எதிரிக்கு மாறும் என்றது. இங்கு, சம்பவத்தின்போது எதிரி வீட்டில் இருந்ததை மறுக்கவில்லை; மனைவி-யின் மரணத்தையோ, ரகசிய தகனத்-தையோ குடும்பத்தினருக்குத் தெரிவிக்-கவில்லை; குழந்தையை தனியாக விட்டுவிட்டு தலைமறைவானார்; சட்டப்பிரிவு 313 விசாரணையில் மரண காரணம் குறித்து முழு மௌனம் காத்தார் — இந்த அடிப்படை உண்மைகள் சட்டப்பிரிவு 106-ஐ இயக்கி, சுமையை எதிரிக்கு மாற்றுவதற்குப் போதுமானவை என்று உச்ச நீதிமன்றம் தீர்மானித்தது.

இந்த அனைத்து சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு, ராணி பயிற்றுவிக்-கப்பட்டதற்கு எந்த ஆதாரமும் இல்லை என்றும், அவரது சாட்சியத்தை நிரா-கரித்ததில் உயர்நீதிமன்றம் பெருந்த-வறு இழைத்துள்ளது என்றும் கூறி, உச்ச நீதிமன்றம் மேல்முறையீட்டை ஏற்று, விடுதலை உத்தரவை ரத்து செய்து, விசாரணை நீதிமன்றத்தின் தண்டனை உத்தரவை மீட்டெடுத்தது. எதிரி நான்கு வாரங்களுக்குள் சரண-டைந்து தண்டனையை அனுபவிக்க உத்தரவிடப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம், **"தகுதியுள்ள குழந்தை சாட்சியின் நம்பகமான வாக்குமூலம் உறுதிப்படுத்தல் இல்லா-மலேயே தண்டனைக்கு அடிப்படை-யாகலாம்; தாமதம் அல்லது மாமன் வீட்டில் தங்கியது என்பன மட்டுமே பயிற்றுவிக்கப்பட்டதற்கான ஆதார-மாகாது; மேலும், வீட்டின் நான்கு சுவர்களுக்குள் நிகழும் மரணத்தில், அடிப்படை உண்மைகள் நிரூபிக்கப்-பட்டவுடன், அதை விளக்காத மௌன-னம் காக்கும் எதிரிக்கு எதிராக சாட்சியச் சட்டப்பிரிவு 106-ன்படி சுமை மாறும்"** என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்ச நீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

Criminal Appeal No. 1669 of 2012

The State of Madhya Pradesh Vs Balveer Singh

Date: 24.02.2025

Citation: 2025 INSC 261

Coram: Justice J.B. Pardiwala & Justice Manoj Misra

--------------------------

#14#

ஒரு வழக்கில் தரப்பினராக இல்லாத ஒருவர், அவ்வழக்கில் பிறப்பிக்கப்பட்ட ஒருதலை தீர்ப்பாணை மோசடியாகவும் கூட்டுசதியாகவும், அதிகார எல்லை இல்லாத நீதிமன்றத்தில் பெறப்பட்டது எனக் கூறி புதிய விளம்புகை வழக்கு தாக்கல் செய்யும்போது, அவ்வழக்கை முன்தீர்ப்புத் தடை (res judicata) அடிப்படையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை VII விதி 11 மூலம் தொடக்கத்திலேயே தள்ளுபடி செய்ய முடியுமா?



இவ்வழக்கில், மேல்முறையீட்டாளர் (வாதி) வழக்குச் சொத்தை 1998-ஆம் ஆண்டு Hussain Babu-விடமிருந்து வாங்கினார்; அவர் அதை 1991-ஆம் ஆண்டு Jayam Ammal-இடமிருந்து வாங்கியிருந்தார். அமைதியான அனுபவ உரிமையில் இருந்தபோது, ஒரு advocate-commissioner தன் நிலத்தை ஆய்வு செய்ய வருவதாக அறிந்த மேல்முறையீட்டாளர், விசாரித்ததில், முதல் பிரதிவாதி — கூட்டு உரிமையாளர் எனக் கூறி — Jayam Ammal மற்றும் பிறருக்கு எதிராக பாகப்பிரிவினை வழக்கு (O.S.No.298 of 1996) தாக்கல் செய்து, Cuddalore சார்பு நீதிமன்றத்தில் 29.07.1997 அன்று ஒருதலை தீர்ப்பாணை பெற்றிருந்ததை அறிந்தார். அந்த ஒருதலை தீர்ப்பாணையை நிறைவேற்றும் நடவடிக்கையிலேயே advocate-commissioner நியமிக்கப்பட்டிருந்தார். இதனால், தன் சொத்துரிமையை விளம்புகை செய்யவும், நிரந்தர தடையாணை பெறவும் மேல்முறையீட்டாளர் தற்போதைய வழக்கை (O.S.No.60 of 2009) தாக்கல் செய்தார். அந்த ஒருதலை தீர்ப்பாணை மோசடியாகவும் கூட்டுசதியாகவும் பெறப்பட்டது என்றும், அது தன்னைக் கட்டுப்படுத்தாது என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், அந்த வழக்கில் ஆறு சொத்துகள் இருந்தபோதிலும், பெரும்பான்மையானவை Parangipettai / Chidambaram எல்லைக்குட்பட்டவை என்றும், Cuddalore நீதிமன்றத்தின் அதிகார எல்லையை வலிந்து பெறுவதற்காகவே ஒருசென்ட் அளவிலான சொத்து சேர்க்கப்பட்டது என்றும், எனவே அது மண்டல அதிகார எல்லை இல்லாத நீதிமன்றத்தில் மோசடியாகத் தாக்கல் செய்யப்பட்டது என்றும் வாதிட்டார்.

பிரதிவாதி தரப்பு, முந்தைய ஒருதலை தீர்ப்பாணை இறுதி பெற்றுவிட்டதால் தற்போதைய வழக்கு முன்தீர்ப்புத் தடையால் தடைபடுகிறது எனக் கூறி, கட்டளை VII விதி 11 மூலம் வழக்குமனுவைத் தள்ளுபடி செய்யக் கோரி இடைக்கால மனு தாக்கல் செய்தது. மேல்முறையீட்டாளர், தான் முந்தைய வழக்கில் தரப்பினராக இல்லாததால் முன்தீர்ப்புத் தடை பொருந்தாது என மறுத்தார். விசாரணை நீதிமன்றம் (District Munsif cum

Judicial Magistrate, Portonovo) பிரதிவாதியின் மனுவை ஏற்று வழக்குமனுவைத் தள்ளுபடி செய்தது; Madras உயர்நீதிமன்றமும் அதன் எதிரான உரிமையியல் திருத்த மனு-வைத் தள்ளுபடி செய்தது. இதை எதிர்த்தே இந்த மேல்முறையீடு உச்சநீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்-பட்டது.

உச்சநீதிமன்றம், மேல்முறையீட்டா-ளர் முந்தைய வழக்கில் தரப்பினராக இல்லை என்பது உண்மையெனினும், அவர் Hussain Babu (முந்தைய வழக்கின் மூன்றாம் பிரதிவாதி) மூலம் உரிமை கோருகிறார் என்பதையும் கவனத்தில் கொண்டது. ஒருதலை தீர்ப்பாணை பெறப்பட்ட சூழ்நிலை-கள், கூறப்படும் கூட்டுசதி, மற்றும் அதிகார எல்லை இல்லாத நீதிமன்-றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மோசடி ஆகியவை தற்போதைய வழக்கில் குறிப்பாக எழுப்பப்பட்டு மறுக்கப்ப-டுவதால், விளம்புகைப் பரிகாரமும் கோரப்பட்டிருப்பதால், இவை ஆழ-மான விசாரணைக்கு உட்பட்டவை என்றது. இந்த நிலைப்பாட்டிற்கு நீதிமன்றம் Srihari Hanumandas Totala v. Hemant Vithal Kamat & Ors, (2021) 9 SCC 99 தீர்ப்பை மேற்கோள் காட்டியது — வழக்குமனுவை கட்டளை VII விதி 11(d) மூலம் தள்ளுபடி செய்ய, வழக்குமனுவில் உள்ள கூற்றுகளை மட்டுமே பரிசீலிக்க வேண்டும்; பிரதிவாதியின் தற்காப்பு கருத்தில் கொள்ளப்படக்கூடாது என்றும், முன்தீர்ப்புத் தடை நிரூபிக்க முந்தைய வழக்கு முடிவு பெற்றிருக்க வேண்டும், தற்போதைய வழக்கின் பிரச்சினைகள் அதில் நேரடியாகவும் முக்கியமாகவும் இடம்பெற்றிருக்க வேண்டும், ஒரே தரப்பினரிடையே இருந்திருக்க வேண்டும், தகுதியுள்ள நீதிமன்றத்தால் இறுதியாகத் தீர்மா-னிக்கப்பட்டிருக்க வேண்டும் என்ப-தால், இது வழக்குமனு கூற்றுகளை மட்டும் பார்க்கும் விதி 11(d)-இன் எல்லைக்கு அப்பாற்பட்டது என்றும் வலியுறுத்தியது.

மேலும், V. Rajeshwari v. T.C. Sara-vanabava, (2004) 1 SCC 551 தீர்ப்பை மேற்கோள் காட்டி, வழக்கு காரணங்களில் உள்ள ஒற்றுமையை அடையாளம் காண்பது ஆவணங்-களை ஆய்வு செய்யும் விசாரணையின்

போதே சாத்தியம் என்றும், முன்தீர்ப்புத் தடை ஊகத்தின் அல்லது அனுமானத்தின் அடிப்படையில் தீர்மானிக்கப்படக்கூடாது என்றும் நீதிமன்றம் குறிப்பிட்டது. Keshav Sood v. Kirti Pradeep Sood தீர்ப்பிலும், வழக்குமனுவைத் தள்ளுபடி செய்யும் மனுக்களில் முன்தீர்ப்புத் தடைக் கோரிக்கையை எழுப்புவதற்கு எதிராக உச்சநீதிமன்றம் கடுமையான நிலைப்பாட்டை எடுத்து, அப்பிரச்சினை முந்தைய வழக்கின் வாதங்கள், விசாரணை நீதிமன்றத் தீர்ப்பு, மேல்முறையீட்டு நீதிமன்றத் தீர்ப்புகள் ஆகியவற்றைப் பரிசீலிக்க வேண்டியிருப்பதால் இந்தக் கட்டத்தில் தீர்மானிக்க முடியாது என்று கூறியதை நினைவூட்டியது.

விசாரணை நீதிமன்றத்தின் உத்தரவில், மேல்முறையீட்டாளர் வழக்குமனுவில் முன்வைத்த வழக்கை ஆய்வு செய்ததோ பகுப்பாய்வு செய்ததோ இல்லை; மாறாக, அவர் O.S.No.298/96 தீர்ப்பாணைக்கு எதிராக முன்னதாக ஆட்சேபணை எழுப்பவில்லை என்ற காரணத்திற்காக அவரது நடவடிக்கையின் சட்டப்பூர்வத்தன்மையைக் கேள்விக்குள்ளாக்கியிருந்தது என்று உச்சநீதிமன்றம் கண்டறிந்தது; இந்த அணுகுமுறையையும் காரணத்தையும் ஏற்க இயலாது என்றது. ஒருதலை தீர்ப்பாணை முன்தீர்ப்புத் தடையாகச் செயல்பட்டு தற்போதைய வழக்கைத் தடுக்குமா என்பது குறித்து தான் எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை எனத் தெளிவுபடுத்திய நீதிமன்றம், ஆனால் அந்த விசாரணையைக் கட்டளை VII விதி 11 மூலம் தீர்மானிக்க முடியாது என்று உறுதிப்படுத்தியது. எனவே, மேல்முறையீட்டை அனுமதித்து, உயர்நீதிமன்ற உத்தரவை ரத்து செய்து, O.S.No.60 of 2009 வழக்கை மீட்டெடுத்து, விரைவாக முடிக்குமாறு உத்தரவிட்டது; முன்தீர்ப்புத் தடை உள்ளிட்ட அனைத்துக் கோரிக்கைகளும் இறுதித் தீர்மானத்திற்காகத் திறந்தே வைக்கப்பட்டன.

இந்த தீர்ப்பின் மூலம், "**முன்தீர்ப்புத் தடைக் கோரிக்கை, முந்தைய வழக்கின் வாதங்கள், பிரச்சினைகள் மற்றும் தீர்ப்புகளை ஆழமாக ஆய்வு செய்ய வேண்டியிருப்பதால், அதனை வழக்குமனுவின் கூற்றுகளை மட்டும்**

பரிசீலிக்கும் கட்டளை VII விதி 11 கட்டத்தில் தீர்மானிக்க முடியாது; அது விசாரணையின் போதே தீர்மானிக்கப்பட வேண்டும்"

என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.

---

IN THE SUPREME COURT OF INDIA

---

Civil Appeal No. 7743 of 2025 (arising out of SLP (C) No. 18230 of 2025)

Pandurangan v. T. Jayarama Chettiar & Anr

Coram: Justice Pamidighantam Sri Narasimha & Justice Joymalya Bagchi

Date: 14.07.2025

Citation: 2025 INSC 825

## #15#

**பதிவு செய்யப்பட்ட உயிலில் உள்ள கையொப்பங்களை எதிர்த்தரப்பே ஒப்புக்கொண்ட நிலையில், அந்த உயிலை மறுத்து "கூட்டு குடும்பச் சொத்து" எனக் கோர முடியுமா? பதிவு செய்யப்பட்ட உயிலை மறுக்கும் சுமை யார் மீது?**




இவ்வழக்கு, மறைந்த மெட்பள்ளி ராஜண்ணாவின் வாரிசுகளுக்கிடையே தாஸ்நாபூர் கிராமத்தில் அமைந்த 4 ஏக்கர் 16 குண்டா நிலம் தொடர்பாக எழுந்த உரிமைப் போட்டியை ஆய்வு செய்கிறது. மூல நில உரிமையாளர் மெட்பள்ளி ராமண்ணா 1949-க்கு முன் உயிலின்றி இறந்தார். அவரது வாரி-சான மெட்பள்ளி ராஜண்ணா, முதல் திருமணத்தில் நர்சம்மாவை மணந்து முத்தையா மற்றும் ராஜம்மா என இரு குழந்தைகளைப் பெற்றார். நர்சம்மா ராஜண்ணாவின் வாழ்நாளிலேயே இறந்துவிட, ராஜண்ணா லசும் பாயை இரண்டாவதாக மணந்தார்; அவர்க-ளுக்குக் குழந்தை இல்லை. 1983-ல் ராஜண்ணா இறந்தார்; மகள் ராஜம்-மாவும் உயிலின்றி இறந்ததால், லசும் பாய்க்கும் முத்தையாவுக்கும் இடையே சொத்து உரிமைத் தகராறு எழுந்தது.

லக்ஷ்மி பாய் தரப்பில், ராஜண்ணா தனக்கும் மகனுக்கும் இடையே ஏற்படக்கூடிய தகராறுகளை முன்னரே கணித்து, அவற்றைத் தவிர்க்கும் பொருட்டு வாய்மொழி குடும்ப ஏற்பாட்டின் மூலம் தனது சொத்துகளைப் பங்கிட்டதாகவும், மேலும் 24.07.1974 அன்று லக்ஷ்மி பாய் சார்பாக பதிவு செய்யப்பட்ட உயில் ஒன்றை எழுதி அதில் முத்தையாவின் பங்கையும் அங்கீகரித்ததாகவும் கூறப்பட்டது. இந்த ஏற்பாட்டின்படி, தாஸ்நாபூர் சர்வே எண் 28-ல் வடக்குப் பகுதியில் 6 ஏக்கர் 16 குண்டா நிலம் லக்ஷ்மி பாய்க்கும், தெற்குப் பகுதியில் 6 ஏக்கர் 16 குண்டா நிலம் முத்தையாவுக்கும் கிடைத்தது. லக்ஷ்மி பாய் தனது பங்கிலிருந்து 2 ஏக்கர் நிலத்தை சஞ்சீவ ரெட்டிக்கு 27.08.1987 அன்று பதிவு செய்யப்பட்ட விற்பனை ஆவணம் மூலம் விற்றார்; அந்த விற்பனை எந்த மன்றத்திலும் மறுக்கப்படாமல் நிலைத்தது. மீதமுள்ள 4 ஏக்கர் 16 குண்டா நிலத்தை ஜனார்தன் ரெட்டிக்கு விற்பதற்காக 15.07.1987 அன்று ஒப்பந்தம் செய்தார். இதை எதிர்த்து, முத்தையா அவ்விற்பனையைத் தடுக்க தடையுத்தரவு வழக்கு (O.S.No.101 of 1987) தாக்கல் செய்தார். 06.07.1990 அன்று அந்த வழக்கு முத்தையாவுக்குச் சாதகமாக முடிந்தாலும், லக்ஷ்மி பாயின் உரிமை அவ்வழக்கில் ஆய்வு செய்யப்படவில்லை என்றும், தனி விளம்புகை வழக்கு தாக்கல் செய்ய அவருக்கு உரிமை உண்டு என்றும் அடிலாபாத் மாவட்ட முன்சீப் தெளிவாகப் பதிவு செய்தார்.

அதன்படி, லக்ஷ்மி பாய் தனது உரிமையை நிலைநாட்ட விளம்புகை வழக்கு (O.S.No.2 of 1991) தாக்கல் செய்தார். முத்தையா தனது பதிலுரையில், அச்சொத்துகள் கூட்டு மூதாதையர் சொத்துகள் என்றும், ராஜண்ணா 1983-ல் உயிலின்றி இறந்ததால் தானே இந்து கூட்டு குடும்பத்தின் ஒரே சகபங்குதாரர் ஆனதாகவும் வாதிட்டார். லக்ஷ்மி பாய் பதிவு செய்யப்பட்ட உயிலை (Ext.A1) சான்றாக முன்வைத்து இரு சாட்சிகளை விசாரித்தார். முத்தையா DW-1 ஆக சாட்சியம் அளித்தபோது சில முக்கியமான ஒப்புதல்களை வழங்கினார் — உயிலில் உள்ள கையொப்பங்கள் தனது தந்தையுடையவை என்பதையும், லக்ஷ்மி பாய் 6

ஏக்கர் 16 குண்டா நிலத்தை அனுபவ உரிமையில் வைத்திருந்ததையும் ஒப்புக்கொண்டார். இதன் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் (அடிலாபாத் மாவட்ட நீதிபதி) 15.11.1994 அன்று லசும் பாய்க்குச் சாதகமாகத் தீர்ப்பளித்தது; ராஜண்ணா தெளிந்த மனநிலையில் உயிலை எழுதியதாகவும், தரப்பினர் தங்கள் பங்குகளைத் தனித்தனியாக அனுபவித்து வந்ததை முத்தையாவே ஒப்புக்கொண்டதால் வாய்மொழி குடும்ப ஏற்பாடு உண்மையானது என்றும் கண்டறிந்து, வழக்குச் சொத்துகள் மீது முழு உரிமையும் நிரந்தர தடையுத்தரவும் வழங்கியது.

இதை எதிர்த்து முத்தையாவும் ராஜம்மாவும் ஆந்திரப் பிரதேச உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு (A.S.No.178 of 1995) செய்தனர். உயர்நீதிமன்றம் 23.01.2014 அன்று மேல்முறையீட்டை ஓரளவு ஏற்று, முத்தையாவுக்கு 3/4 பங்கும் லசும் பாய்க்கு 1/4 பங்கும் மட்டுமே உரித்தானது எனத் தீர்ப்பளித்து, விசாரணை நீதிமன்றத் தீர்ப்பை மாற்றி, பாகப் பிரிவினைக்கான முதற்கட்ட உத்தரவு வழங்கியது. இதை எதிர்த்து லசும் பாயும் ஜனார்தன் ரெட்டியின் வாரிசுகளும் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு (C.A.No.5921 of 2015) செய்தனர். வழக்கின் நிலுவையில் லசும் பாய் வாரிசுகள் இன்றி 17.01.2015 அன்று இறந்ததால், ஜனார்தன் ரெட்டியின் வாரிசுகள் அவரது சொத்துரிமையைப் பிரதிநிதித்துவப்படுத்த உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை XXII விதி 10-ன் கீழ் அனுமதி கோரினர். மறுபுறம், முத்தையாவின் வாரிசுகள் லசும் பாய்க்கு 1/4 பங்கு வழங்கியதை எதிர்த்து C.A.No.5922 of 2015 தாக்கல் செய்தனர்.

மேல்முறையீட்டாளர்கள் தரப்பில், உயில் இல்லையென்று வைத்துக்கொண்டாலும் மரபுவழி அடிப்படையில் லசும் பாய்க்கு ராஜண்ணாவின் சொத்துகளில் 1/3 பங்கு கிடைக்கும் — அது வழக்குச் சொத்தை விடப் பெரியது என்றும், முத்தையா தந்தையின் கையொப்பங்களை ஒப்புக்கொண்ட நிலையில் உயிலை மறுக்க முடியாது என்றும், சஞ்சீவ ரெட்டிக்கு நடந்த விற்பனையை முத்தையா அறிந்தும் மறுக்காததால் லசும் பாயின்

உரிமையை அவர் மவுன சம்மதத்துடன் ஏற்றுக்கொண்டார் என்றும் வாதிடப்பட்டது. எதிர்த்தரப்பில், ராமண்ணா இறந்தபோது பங்கிடப்படாத நிலம் ராஜண்ணாவுக்கும் முத்தையாவுக்கும் சம பங்குகளாகச் சேர்ந்தது என்றும், ராஜண்ணா தன்னார்ஜித உரிமை இல்லாத நிலம் மீது உரிமையாளராக உயிலை எழுதியதால் அதற்குச் சட்டச் செல்லுபடி இல்லை என்றும், பதிவு செய்யப்படாத குடும்ப ஏற்பாட்டைச் சான்றாக ஏற்க முடியாது என்றும் வாதிடப்பட்டது.

உச்சநீதிமன்றம், ராமண்ணா இறந்த பிறகு வருவாய் பதிவுகள் (Khasra Pahunis) ராஜண்ணாவின் பெயரில் பதிவு செய்யப்பட்டதையும், ஆந்திரப் பிரதேச வருவாய்ச் சட்டங்களின்படி அத்தகைய பதிவுகள் உரிமைக்கான சான்றாகக் கருதப்படுவதையும் சுட்டிக்காட்டியது. உயில் ஒரு பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்பதால் அதன் உண்மைத்தன்மை குறித்து முன்அனுமானம் எழுகிறது என்றும், அதை மறுக்கும் சுமை அதை எதிர்க்கும் தரப்பின் — அதாவது முத்தையாவின் — மீதே இருக்கும் என்றும் நீதிமன்றம் வலியுறுத்தியது. ஆனால் முத்தையா, உயிலில் உள்ள கையொப்பங்கள் தந்தையுடையவை என்பதையும் லசும் பாய் தனது பங்கு நிலத்தை அனுபவ உரிமையில் வைத்திருந்ததையும் ஒப்புக்கொண்டதால், அந்தச் சுமையை நிறைவேற்றவில்லை. மேலும், உயில் லசும் பாய்க்கு மட்டுமல்லாமல் முத்தையாவுக்கே பெரும் பங்கை வழங்கியிருப்பதால் அதன் உண்மைத்தன்மை சந்தேகத்திற்கு அப்பாற்பட்டது என்று நீதிமன்றம் கண்டறிந்தது; உயில் திரிக்கப்பட்டிருந்தால் முத்தையா முழுவதுமாக அதிலிருந்து விலக்கப்பட்டிருப்பார் என்றது. இதன் அடிப்படையில், விசாரணை நீதிமன்றம் வழங்கிய விளம்புகை மற்றும் நிரந்தர தடையுத்தரவு முற்றிலும் சரியானது என்றும், அத்தீர்ப்பில் தலையிட்டு லசும் பாயின் பங்கைக் குறைத்த உயர்நீதிமன்றத் தீர்ப்பு சட்டப்படி நிலைக்காது என்றும் நீதிமன்றம் தீர்மானித்தது. இறுதியில், உயர்நீதிமன்றத் தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு விசாரணை நீதிமன்றத் தீர்ப்பு மீட்டமைக்கப்பட்டது; C.A.No.5921 of 2015 அனுமதிக்-

கப்பட்டு C.A.No.5922 of 2015 தள்ளுபடி செய்யப்பட்டது.

இந்த தீர்ப்பின் மூலம், "பதிவு செய்யப்பட்ட உயிலின் உண்மைத்-தன்மை குறித்து முன்அனுமானம் எழுகிறது; அதை மறுக்கும் சுமை எதிர்க்கும் தரப்பின் மீதே உள்ளது. உயிலில் உள்ள கையொப்பங்களையும் பயனாளியின் அனுபவ உரிமையையும் ஒப்புக்கொண்ட நிலையில், 'கூட்டு குடும்பச் சொத்து' எனும் வாதத்தால் அப்பதிவு உயிலைச் செல்லாததாக்க முடியாது"

---

**என்ற முக்கியமான சட்டக் கொள்கையை உச்சநீதிமன்றம் உறுதிப்படுத்தியுள்ளது.**

---

IN THE SUPREME COURT OF INDIA

Civil Appeal Nos. 5921 & 5922 of 2015

Metpalli Lasum Bai (since dead) & Ors. v. Metapalli Muthaih (D) by LRs.

Coram: Justice Vikram Nath & Justice Sandeep Mehta

Date: 21.07.2025

Citation: 2025 INSC 879